விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 252 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 11 திங்கட்கிழமை (28.08.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## பாடல் போட்டி எனக் கூறி மன்னாரில் பல லட்சம் மோசடி

### ஆயிரக்கணக்கான மக்கள் ஏமாற்றம்



(மன்னார்)

இலங்கை முழுவதும் உள்ள பாடகர்களுக்கு வாய்ப்பை ஏற் படுத்தி தருவதாக கூறி எவரஸ்ற் FM என்ற பதிவு செய் யப்படாத நிறுவனம் 15

## எம்.பிக்கள் மீது யாரும் கைவைக்க முடியாது

### கடும் தொனியில் ரணில் எச்சரிக்கை



3ஆம் பக்கம் பார்க்க

### வவுனியாவில்

## ரூ. 162,000க்கு மாம்பழம் ஏலம்



(வவுனியா)

வவுனியா-உக்குளாங் குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவ திருவிழாவின் 15

### கப்பல் விவகாரத்தால்

## இந்தியா, சீனா உறவில் எவ்வித பதற்றமும் இல்லை

### வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி



(கொழும்பு)

இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு இடையிலான இலங்கையின் இரு தரப்பு உறவுகளில் எவ்வித மான பதற்றங்களும் இல்லை என வெளிவிவகார அமைச்சர், ஜனாதி பதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித் துள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)

## 8 இலட்சம் பேருக்கு அஸ்வெசும கொடுப்பனவு இன்று வைப்பிலிடப்படும்

(கொழும்பு)

அஸ்வெசும நலன்புரித் திட்டத்தில் தெரிவு செய் யப்பட்டுள்ள 15 இலட்சம் பயனாளர்களில் தகவல் களை முறையாக உறுதிப்படுத்தி, வங்கி வைப் பினை சரியான முறையாக ஆரம்பித்துள்ள 08 இலட்சம் பயனாளர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்கான நிதி திறைசேரி ஊடாக சகல இலங்கை வங்கிகளுக்கும் இன்று 15

## இறுதி வரை போரிட்ட பிரபாகரனின் மகிமையை கொச்சைப்படுத்த வேண்டாம்

### கமால் குணரத்ன



(கொழும்பு)

"தனது துப்பாக்கியில் இறுதித் தோட்டா முடியும் வரைக் கும் போரிட்டுக் குடும்பத்துடன் மடிந்தவர்தான் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபா கரன்.

இந்நிலையில், அவரை யும், அவரது குடும்பத்தையும் வைத்துப் பிழைப்பு நடத்து கின்றார்கள் புலம் பெயர் தமிழர்கள் என 02

### வவு.இரட்டைக் கொலை

## பிரதான சந்தேகநபரின் சகோதரன் மீது தாக்குதல்

(வவுனியா)

வவுனியா, தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற இரட்டை கொலை சம்பவத்துடன் தொடர் புடைய பிரதான சந்தேகநப ரின் சகோதரர் மீது சிலர் தாக் குதல் மேற்கொண்டதில் அவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் 23 15

## காணாமலாக்கப்பட்டோரில் 12 பேர் உயிருடன்?

(கிளிநொச்சி)

வலிந்து காணாமலாக்கப் படல் தொடர்பில் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளில் சுமார் 12 பேர் உயிருடன் இருப்பது கண்டறியப்பட்டு அவர்களது குடும்பத்தினரிடம் சேர்க்கப் பட்டிருப்பதாகவும், இது குறித்த தகவல்கள் வலிந்து காணாமலாக்கப்படல்களால் பாதிக்கப்பட்டோருக்கான சர்வ தேச தினமான நாளை மறு தினம் 30ஆம் திகதி காணா மல் போனோர் பற்றிய அலு வலகத்தினால் பகி ரங்கப்படுத்தப்படும் 15

## கடல் நீரைச் சுத்திகரித்து நன்னீராக்கும் வேலைத்திட்டம்

### யாழ்ப்பாணத்தில் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மக்களின் அன்றாட பாவனைக்காக கடல் நீரைச் சுத்திகரிக்கும் திட் டத்தை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை ஆரம்பித்துள்ளது.

இந்த திட்டத்திற்கான குழாய் இணைப்புகள் தொடர் பான கேள்வி கோரலை மேற் கொண்ட அமைச்சரவை பத் திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள துடன் அனுமதிகிடை த்தவுடன் கேள்விப் 15

## செப்.7வரை நாட்டில் சூரியன் உச்சம்

(கொழும்பு)

இன்று தொடக்கம் செப் ரெம்பர் 7ஆம் திகதி வரை சூரியன் இலங் கைக்கு அண்மித்த 02

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## விசா விண்ணப்பம்

கனடா பிரான்ஸ் லண்டன்

ஆகிய நாடுகளுக்கு விசிட் விசா,பொன்சர் விசா மற்றும் வேலைவாய்ப்பு விசாக்கள் ஆகிய விசாக்கள் பெற்றுத் தரப்படும்.ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்

கனடாவில் வேலைவாய்ப்பு 10 விசாக்கள் மட்டும் கையிருப்பு உள்ளது முடிவுத்திகதி (30.08.2023)

AIRR VISA CENTRE,197 MAIN STREET JAFFNA.

077 266 6429,021 221 0599

077 877 4838

(16869)




தெல் லிப் பழை துர்க்கா தேவி அம்மன் ஆலய வருடா ந்த மஹோற் சவ த் தில் சப்பைரத திரு விழா நேற்று ஆயிரக்கணக் கான பக்தர்கள் சூழ சிறப்பாக இடம்பெற்றது.

*படம்:* சிவசாந்தன், கஜிந்தன்


## யாழ் நகரில் காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரி நல்லூர் வீதியில் கச்சேரிக்கு அண்மையில் 3 1/2 பரப்பு காணி இரண்டு வெட்டு கிணறுகளுடன் உடன் விற்பனைக்கு உண்டு.

55 (SL Rs.) மில்லியனுக்கு மேலான விலை எதிர்பார்க்கப்படுகிறது:

(16830)

மின்னஞ்சல் : jamesraj_uk@yahoo.co.uk

+44 796 374 3585 (Whatsapp)

021 222 7141 (Sri Lankan no)


## இந்தியா, சீனா...

ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியிலேயே மேற்க ண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்கின் வருகை, சீன ஆய்வுக் கப்பலின் வருகை என்பன நிகழ்ச்சிநிரலிடப்பட்டதன் அடிப்படையில் இடம்பெறுவதால் எவ்வித குழப்பங்களும் இல்லை இலங்கைக்குள் போர் மற்றும் ஆய்வுக் கப்பல்கள், விமா னங்களின் வருகைகளின் போது வெளிப் படைத் தன்மையை பேணுவதற்காக "நிலையான செயற்பாட்டு பொறிமுறை" வரைபொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அது விரைவில் அமுல்படுத்தப்படவுள்ளது.

இலங்கைக்கு அடுத்த வாரம் இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் விஜயம் செய்யவுள்ளதோடு, ஒக்டோபர் மாதம் 25 ஆம் திகதி சீனாவின் "Shi Yan 6" ஆய்வுக் கப்பல் இலங்கைக்கு வருகை தரவுள்ளது.

இலங்கை அரசாங்கம் இந்தியா மற் றும் சீனா ஆகிய நாடுகளுடன் இருதரப்பு உறவுகளைக் கொண்டுள்ளதுடன் இரு நாடுகளும் இலங்கைக்கு நீண்ட கால ஒத்துழைப்புகளை வழங்கி வருகிறது.

குறித்த விஜயங்கள் குழப்பங்களை ஏற்படுத்தப்போவதில்லை இலங்கை அணிசேரா கொள்கையை பின்பற்றி வரு வதுடன் இந்தியா, சீனா ஆகிய நாடுக ளுடன் மிக நெருக்கமாக இணைந்து செயற்பட்டு வருவதாக வெளிவிவகார அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.(4,7)

## செப்.7...

அட்சரேகைகளுக்கு மேல் நேரடியாக உச்சம் கொடுக்கும் எனவும் வளி மண் டலவியல் திணைக்களம் தெரிவித்து ள்ளது.

அதன்படி இன்று நண்பகல் 12.11 மணிக்கு கோவிலன் முனை மற்றும் மல்லாகம் ஆகிய பகுதிகளில் சூரியன் உச்சம் கொடுக்கும் என எதிர்வு கூறப் பட்டுள்ளது.

மேலும் இன்றுமுதல் அடுத்த சில நாட்களில் நாட்டின் தென்மேற்குப் பகுதி யில் மழையுடனான வானிலையில் அதிகரிப்பு எதிர்பார்க்கப்படுவதாக வளி மண்டலவியல் திணைக்களம் அறிவித் துள்ளது.

இதன்படி, மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் நுவரெலியா, கண்டி, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களி லும் பல தடவைகள் மழை பெய்யக்கூடும் என அந்த திணைக்களம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது.

இடியுடன் கூடிய மழையுடன் தற்காலிக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக் கத்தினால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக் குமாறு வளிமண்டலவியல் திணைக் களம், மக்களைக் கோரியுள்ளது. (4,7)

## இறுதிவரை...

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல்குணரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"பிரபாகரனோ அல்லது அவரின் குடும் பத்தில் எவருமோ இன்று உயிருடன் இல்லை. இறுதிப்போரில் பங்கெடுத்த படைத் தளபதிகளில் ஒருவன் என்ற ரீதியில் இந்த உண்மையை மீண்டுமொரு தடவை கூறுகின்றேன்.

இறுதி யுத்தத்தில் இறுதி வரைக்கும் போரிட்டு தன் குடும்பத்துடன் சாவடைந் தவர்தான் பிரபாகரன். அவர் பயங்கரவாத அமைப்பின் தலைவர். ஆனால், அவர் தனது கொள்கையில் இறுதிவரைக்கும் மாறாமல் நின்ற ஒரு தலைவர். அவருக்கென சில மகிமைகள் உண்டு. அந்த மகிமைகளைக் கொச்சைப்படுத்த வேண்டாம் என்று புலம்பெயர் தமிழர் களிடம் கேட்டுக் கொள்கின்றேன் எனத் தெரிவித்தார். (4-7)


## சேவை நலன் பாராட்டு



செல்வி. உமாறாணி சிங்கை ஆரியரத்னம்

(முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் – கோட்டக் கல்வி அலுவலகம், கோப்பாய்)

முதல் நியமனம் : 28.05.1997

ஓய்வு : 28.08.2023

இனிமையாகப் பேசி இங்கிதமாய் பழகி
கடமைதனில் கருத்துடனே சேவையாற்றி
நம்பிக்கைக்குரியவராய் மேன்மை பெற்று
ஓய்வுபெறும் எம் அன்னை உமாறாணி
ஆன்மீக வழிதனிலே அமைதி பெற்று
நல்வாழ்வும் நற்சுகமும் நிறைவாய் பெற்று வாழ
மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes!

யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலக நலன்புரிச் சங்கம்

(C-7148)



## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கீரிமலை சிவன் கோவில் முன்பாக 33 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலில் இருந்து அளவெட்டி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்
- நகுலேஸ்வரர் மகா வித்தியாலயத்தில் இருந்து 250 m தூரம், நகுலேஸ்வரர் ஆலயம் 50 m தூரம், பிரதான பஸ்தரிப்பு நிலையம் 75 m தூரம்.
- செம்மண்காணி நன்நீர் ஊற்றுநிலம் வீடு கட்டுவதற்கும் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம் நல்ல சூழல்
- 3 பரப்பு ஆகவும் 2 பரப்பு ஆகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் நிலப்பரப்பு
- பார்வையிடும் நேரம் : காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணி வரை

(16868)

தொடர்புகளுக்கு:- குரு

076 755 8606,
077 874 3204, 077 288 0152


## நடனமாடிக்கொண்டிருந்தவர் திடீரென விழுந்து உயிரிழப்பு

### தெல்லிப்பழையில் சம்பவம்

மேடையில் நடனமாடி க்கொண்டிருந்த நபர் ஒரு வர் திடீரென கீழே விழு ந்து உயிரிழந்த சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெ ற்றுள்ளது.

இச்சம்ப வம் குறி த்து மேலும் தெரியவரு கையில்,

தெல்லி ப்பழையில் உள்ள தனி யார் மண் டபத்தில் இட ம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கன டாவில் இருந்து வருகை தந்த குறித்தநபர் பாடல் ஒன்றுக்கு நடனமாடிக் கொண்டிருந்த வேளை திடீரென கீழே விழுந்தார்.

அவரை மீட்டு தெல் லிப்பழை வைத்தியசாலை க்கு கொண்டு சென்ற வேளை, அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத் தியர்கள் தெரிவித்தனர்.

அதன்பின்னர் பிரேத பரிசோதனைக்காக சடல மானது யாழ்ப்மாணம் போதனா வைத்தியசாலை க்கு கொண்டு செல்லப்பட்டு, பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.(4,7,104)


## காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கு ஸ்ரேசன் வீதி யில் (காளி கோயிலுக்கும் கோண்டா வில் இந்து மகா வித்தியாலயத்திற்கும் இடையில்) 1 1/2 பரப்புக்களாக பிரிக் கப்பட்ட நிலையில் காணித்துண்டுகள் விற்பனைக்குண்டு. (16872)

077 728 6061



## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 02.07.1930 மறைவு 08.09.2022

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் புன்னாலைக்கட்டுவன் தெற்கை வாழ்விடமாகவும் கொண்ட

அமரர் ஸ்ரீமதி பத்மாவதி நன்னித்தம்பி

அவர்களின் ஓராண்டு நினைவஞ்சலி

ஆயக் கடவை பிள்ளையார் கோயில் முன் ஒழுங்கை (பூதராயர் கோயிலடி) புன்னாலைக்கட்டுவன்.

தகவல்: குடும்பத்தினர்

(16871)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கஜேந்திரகுமாரை பாதுகாத்தால்

# ரணில் வீட்டை முற்றுகையிடவும் தயங்கமாட்டோம் -கம்மன்பில எச்சரிக்கை

(கொழும்பு)

**கஜேந்திரகுமாரை பாதுகாத்தால் ரணிலின் வீட்டை முற்றுகையிடவும் தயங்கமாட்டோம் என பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கோரிக்கைக்கு அடிபணிந்து பொலிஸாரையும், படையினரையும் அவரின் வீட்டுக்கு முன்பாக குவித்து அவரை பாதுகாக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

கஜேந்திரகுமார் பாராளுமன்ற உறுப்பினராக இருப்பதற்கு தகுதியற்றவர் என்றும், அவருக்கு பாதுகாப்பு வழங்குவதை ஜனாதிபதி உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் உதய கம்மன்பில எம்.பி. வலியுறுத்தினார்.

இல்லையேல் ஜனாதிபதி ரணிலின் வீட்டை முற்றுகையிடவும் தாம் தயங்கமாட்டோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் சிங்கள-பௌத்த மக்களுக்கு எதிராகவும் நாட்டுக்கு எதிராகவும் செயற்படும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு விரட்டியடித்தே தீருவோம் என்றும் அவர் சூளுரைத்துள்ளார். (நி)



# எம்.பிக்களுக்கு ஆபத்து ஏற்பட ஒருபோதும் இடமளிக்கமாட்டேன்

### ஜனாதிபதி ரணில் உறுதி

(கொழும்பு)

**“மக்கள் பிரதிநிதிகளே பாராளுமன்ற உறுப்பினர்கள். அவர்களின் உயிர்களுக்கு அல்லது அவர்களின் வீடுகளுக்கு ஆபத்து ஏற்பட ஒரு போதும் இடமளியேன்.” இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்.**

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்எம்பியின்கொழும்பு வீடு முன்பாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந் நிலையிலேயே ஜனாதிபதி மேற்படிக் கருத்தை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“எங்கு பாதுகாப்பு கேள்விக்குட்படுத்தப்படுகின்றதோ அங்கு பொலிஸாரையும் படையினரையும் வர வழைத்துப் பாதுகாப்பைப் பலப்படுத்துவேன்.

தற்போது சில தரப்பினர் எடுத்ததற்கெல்லாம் எதிர்ப்புப் போராட்டங்களை நடத்துகின்றனர்.

எம்.பிக்களையும் அவர்கள் விட்டுவைக்கவில்லை. எனினும், எம்.பிக்களின் உயிர்களுக்கும், அவர்களின் வீடுகளுக்கும் ஆபத்து ஏற்பட ஒருபோதும் இடமளியேன்” என அவர் உறுதிபடத் தெரிவித்தார். (நி)

# அடுத்த வருடத்திற்கு தேவையான பாடப்புத்தகங்கள் தயார்

### கல்வி அமைச்சர் சுசில்

(கொழும்பு)

அடுத்த வருடத்திற்கு தேவையான பெரும்பாலான பாடப்புத்தகங்கள் அச்சிடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அச்சிடப்பட்ட புத்தகங்களில் பெரும்பாலானவை அரசாங்க அச்சக கூட்டுத்தாபனத்தின் களஞ்சியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தனியார் துறைக்கான புத்தகங்கள் அடுத்த வாரமளவில் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

.அத்துடன், பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான அனைத்து சீருடை துணிகளையும் சீனாவிடம் கோரியுள்ளதாகவும் அதற்கு சாதகமான பதில் கிடைக்கப் பெறும் என எதிர்பார்ப்பதாகவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். (நி)

# நேருக்கு நேர் மோதிய பேருந்துகள் 14 பேர் வைத்தியசாலையில்



(கொழும்பு)

இரண்டு பேருந்துகள் நேருக்கு நேர் மோதியதில் ஏற்பட்ட விபத்தில் 14 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தனோவிட்ட பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு இந்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களில் நால்வர் தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்துடன்

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்துடன் மற்றுமொரு பேருந்து மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (நி)

# இரு வழிபாட்டு தலங்களையும் குருந்தூரில் நிர்மாணியுங்கள்

### பேராசிரியர் சன்ன முன்மொழிவு

(கொழும்பு)

குருந்தூர் மலையில் சர்ச்சைகள் நீடித்துக்கொண்டிருக்கும் நிலையில் இனங்களுக்கு இடையிலான முரண்பாடுகளும் அதிகரித்து வருவதால் அதற்கு நிரந்தரமான தீர்வொன்றை பேராசிரியர் சன்ன ஜயசுமன முன்மொழிந்துள்ளார்.

அவருடைய முன்மொழிவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

குருந்தி மலையானது (குருந்தூர் மலையானது) தொல்பொருளியல் பகுதியாகும். அதற்கான சான்றாதாரங்கள்பலகாணப்படுகின்றன. ஆகவே அந்தப் புராதன இடத்தினை பேணுவது மிகவும் முக்கியமானதாக உள்ளது.

எனினும், குறித்த பகுதியில் பௌத்தர்கள் மற்றும் இந்துக்கள் வழிபாடுகளைச் செய்து வந்ததாக வரலாற்றின் அடிப்படையில் குறிப்பிடப்படுகிறது.

ஆகவே, தற்போதைய நிலைமையில், இந்த விடயத்தினை மையப்படுத்தி பௌத்தர்கள், இந்துக்கள் இடையே முரண்பாடான நிலைமைகள் வலுவடைவதற்கு இடமளிக்காமல் ,நிரந்தரமானதொரு தீர்வினை காண்பது அவசியமாகிறது.

அதன் அடிப்படையில், குறித்த மலையின் கீழ்ப் பகுதியில் உள்ள பிரதேசத் தில் தொல்பொருளியல் விடயங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாமல், இரு சமயத் தலங்களை நிர்மாணிப்பதே பொருத்தமானதாகும்.

குறிப்பாக, மலையின் கீழ்ப் பகுதியில் தலா ஒவ் வொரு ஏக்கர் வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இந்து மற்றும் பௌத்த தலங்களை நிர்மாணிப்பதன் ஊடாக இரு தரப்பினரும் தமது இறை நம்பிக்கைக்கு அமைவாக வழிபாடுகளை முன்னெடுக்க முடியும்.

இதற்கு வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காமத்தினை முன்னுதாரணமாகக் கொள்ள முடியும். அதன் மூலமாக பிரச்சினை களுக்கு நிரந்தர மான தீர்வினைக் காண முடியும் என அவர் தெரிவித்தார். (நி)

# ‘ஷி யான் 6’ சீன ஆய்வுக் கப்பலுக்கு அனுமதி

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சின் கோரிக்கைக்கு அமைய, சீன ஆய்வுக் கப்பலான “ஷி யான் 6” இலங்கைக்கு விஜயம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்த சீன கடல் ஆய்வுக் கப்பல் இலங்கையின் நாரா நிறுவனத்துடன் இணைந்து அறிவியல் பயணத்திற்குத் தயாராகி வருவதாகவும் தென்னிந்தியப் பெருங்கடல் பகுதி மற்றும் பொருளாதார வலயம் உள்ளிட்டவற்றை உள்ளடக்கி விரிவான ஆய்வை மேற்கொள்ள உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் இந்த கப்பல் கொழும்பு துறைமுகம் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நங்கூரமிட திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச ஒருநாள் போட்டிகளுக்கான தரவரிசை பட்டியலில் பாகிஸ்தான் முதலிடத்தில்



சர்வதேச ஒருநாள் போட்டிகளுக்கான தரவரிசைப் பட்டியலில் பாகிஸ்தான் அணி முதலிடத்தை தன்வசப்படுத்தியுள்ளது.

ஆப்கானிஸ்தான் அணிக்கெதிராக நேற்று முன்தினம் இடம்பெற்ற மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றதைத் தொடர்ந்து முதலாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

23 போட்டிகளில் விளையாடியுள்ள பாகிஸ்தான் அணி 2.725 புள்ளிகளை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தரவரிசையில் அவுஸ்திரேலிய அணி இரண்டாவது இடத்திலும் இந்திய அணி மூன்றாவது இடத்திலும் தரப்படுத்தப்பட்டுள்ளதுடன் நியுஸிலாந்து மற்றும் இங்கிலாந்து ஆகிய அணிகள் முறையே 4 மற்றும் 5ஆம் இடங்களில் தரப்படுத்தப்பட்டுள்ளன. (நி)

# ரொனால்டோ ஹற்றிக் கோல்

# சவுதி புரோ லீக்கில் அல் நஸர் முதல் வெற்றி



சவுதி புரோ லீக் தொடரில் அல் நஸர் அணி 5-0 என்ற கோல் கணக்கில் அல் ஃப்டெஹ் அணியை வீழ்த்தியது.

பிரின்ஸ் அப்துல்லா மைதானத்தில் நடந்த போட்டியில் அல் நஸர் மற்றும் அல் ஃப்டெஹ் மோதின.

ஆட்டத்தின் 27 ஆவது நிமிடத்தில் சடியோ மனே அபாரமாக கோல் அடித்தார். அதனைத் தொடர்ந்து 38 ஆவது நிமிடத்தில் ரொனால்டோ தனது கோல் கணக்கை தொடங்கினார்.

தலையால் முட்டி மிரட்டலாக கோல் அடித்த ரொனால்டோ, 55 ஆவது நிமிடத்தில் அசால்டாக இரண்டாவது கோல் அடித்தார்.

அல் நஸரின் வேகத்தை அல் ஃப்டெஹ் அணியினரால் கட்டுப்படுத்த முடியவில்லை. 81 ஆவது நிமிடத்தில் சடியோ மனே தலையால் முட்டி அபாரமாக கோல் அடித்தார்.

பின்னர் 91 ஆவது நிமிடத்தில் ரொனால்டோ 3 ஆவது கோலை அடித்தார். இதன் மூலம் அல் நஸர் அணி 5-0 என்ற கோல் கணக்கில் சவுதி ப்ரோ லீக்கில் முதல் வெற்றியை பதிவு செய்தது. (4)

# கோலிக்கு பி.சி.சி.ஐ எச்சரிக்கை

இந்திய அணியின் நட்சத்திர கிரிக்கெட் வீரர் விராட் கோலிக்கு இந்திய கிரிக்கட் கட்டுப்பாட்டு சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்தியாவில் எதிர்வரும் ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் 50 ஓவர் உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் நடைபெற உள்ளது.

10 ஆண்டுகளாக ஐ.சி.சி கிண்ணத்தை வெல்லாத இந்திய அணி சொந்த மண்ணில் நடைபெறும் உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றும் முனைப்புடன் உள்ளது.

இந்நிலையில் உலகக்கிண்ணத்திற்கு ஆசிய கண்டத்தைச் சேர்ந்த அணிகள் தயாராகும் வகையில் எதிர்வரும் 30 ஆம் திகதி ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டி ஆரம்பமாகவுள்ளது.

உலகக்கிண்ணத்திற்கு வீரர்களை தேர்வு செய்ய உதவும் இந்த தொடரில் விளையாடுவதற்கு ரோகித் சர்மா தலைமையில் 17 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், வீரர்களின் உடற்தகுதி குறித்து சோதிக்கும் யோ யோ தேர்வு பெங்களூரில் நடைபெற்று வருகிறது.

அதன்படி யோ யோ தேர்வில் நட்சத்திர வீரர் விராட் கோலி கலந்து கொண்டு உடல் தகுதியை நிரூபித்தார். அனைத்து விதமான சோதனைகளையும் கடந்து 17.2 மதிப்பெண்கள் பெற்றுள்ளதாக விராட் கோலி தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டிருந்தார்.

இந்நிலையில் குறித்த பதிவு தொடர்பில் அவருக்கு பி.சி.சி.ஐ எச்சரிக்கை விடுத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

"யோ யோ தேர்வு குறித்த புகைப்படத்தை பதிவிடலாம். ஆனால் மதிப்பெண்ணை யாரைக் கேட்டு பதிவிட்டீர்கள்" என்று பி.சி.சி.ஐ கேள்வி எழுப்பியதாக கூறப்படுகிறது.

மேலும், எந்த வீரரும் யோ யோ தேர்வு குறித்த மதிப்பெண்ணை வெளியிடக்கூடாது என பி.சி.சி.ஐ அனைத்து வீரர்களுக்கும் அறிவுறுத்தியுள்ளது. (நி)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2898

தமிழன்




நிருபன்




வதனி




தரன்




தர்ஷி




ராஜன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 வகையான மருந்துகளை இறக்குமதி செய்ய திட்டம்

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் தட்டுப்பாடு நிலவும் மேலும் 50 வகையான மருந்துகள் எதிர்வரும் 2 வாரங்களுக்குள் இறக்குமதி செய்யப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, நாட்டில் தற்போது நிலவும் மருந்து தட்டுப்பாடு குறைவடையுமென அமைச்சு குறிப்பிட்டுள்ளது. தற்போது மருத்துவ விநியோகத்துறையில் 230 மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றன.

அந்த மருந்துகள் அனைத்தும் உடனடியாக இறக்குமதி செய்யப்படும் என சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்திய கடன் உதவியின் கீழ் இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)

# தொழிற்கல்வி பாடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

## கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர உயர்தரத்தில் தொழிற்கல்வி பாடங்களுக்காக மாணவர்களை இணைப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தொழிற்கல்வி கற்கைநெறி முன்னெடுக்கப்படும் 525 பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்களை அனுப்ப முடியும்.

கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பெறுபேறுகள் இந்த தெரிவின் போது கருத்திற் கொள்ளப்பட மாட்டாது என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி தொழிற்கல்வி பாடத்திட்டத்தின் கீழ் 12 ஆம் தரத்தில் பாடசாலை கல்வியை நிறைவு செய்து 13 ஆம் தரத்தில் தொழிற்கல்வி தொடர்பான பாடங்களின் கீழ் என்.வி.கியூ நான்காம் நிலை தொழிற்பயிற்சி நெறியொன்றை நிறைவு செய்ய முடியும்.

சிறுவர் உளவியல் மற்றும் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் ஆய்வுகள், வாகன இயந்திர தொழில்நுட்பவியல் மற்றும் ஆடை வடிவமைப்பு உள்ளிட்ட இருபது பாடங்கள் இந்தத் தொழிற்கல்வியில் சேர்க்கப்பட்டுள்ளன.

13 வருட உறுதிப்படுத்தப்பட்ட கல்வியை வழங்கும் நோக்கில் இந்த தொழிற்கல்வி நடைமுறைப்படுத்தப்படுவதுடன், இது தொடர்பான விண்ணப்பங்களை உரிய பாடசாலைகளின் அதிபருக்கு அனுப்பி வைக்குமாறும் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (நி)

## ஜனாதிபதி வேட்பாளர் யார்?

# பசில்-நாமல் இடையே உக்கிரமடையும் பனிப்போர்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலான பேச்சுகள் கடந்த சில வாரங்களாக உக்கிரமடைந்துள்ளதால் பொதுஜன பெரமுனவுக்குள் பல்வேறு கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

வேட்பாளர் யார் என்ற கோணத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் பனிப்போர் காரணமாக பல்வேறு பிளவுகளும் கட்சிக்குள் ஏற்பட்டுள்ளன.

ஒரு குழு பசில் ராஜபக்ஷவின் பெயரையும் மற்றொரு குழு பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் பெயரையும் முன்மொழிந்துள்ளது.

எவ்வாறாயினும், ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக தனது அமெரிக்க குடியுரிமையை நீக்குவதற்கு பசில் ராஜபக்ஷ தயக்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அதன் காரணமாக அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக நாமல் ராஜபக்ஷவை நியமிக்க வேண்டும் என கட்சியின் குழுவொன்று போர்க்கொடி உயர்த்தியுள்ளது. நாமல் ராஜபக்ஷ இது தொடர்பில் தமது நிலைப்பாட்டை இதுவரை வெளிப்படுத்தவில்லை. (நி)




## மயிலேறி வருவாயா கந்தா

நல்லைப் பதிதனிலுறையும் முருகா!
நற்றமிழ் போற்றும் முருகா!
அடியவர்கள் குறை தீர்க்கும்
அலங்காரக் கந்தனே முருகா!
உள்நாட்டுப் போர் முடிந்து
உயிரிழப்புக்கள், குறைந்தும் மறைந்தும்
போக இப்போ, தானாக முடிவு எடுத்து தற்கொலை
செய்யும் கூட்டம் ஒருபுறம்
போதைவஸ்து பாவனையால் உயிர்மாய்க்கும் கூட்டம்
ஒருபுறம் வாகன விபத்துக்களால் தினம்
உயிர் போகும் அவலநிலை மறுபுறம்
துன்பங்கள், துயரங்கள் எம் நெஞ்சைப்
பிழிந்து எடுக்கிறது கந்தா!
எம் மக்களைக் காத்து அருளிட
உமது அபயக் கரத்தை ஒருமுறை நீட்டு கந்தா!
எம் இனத்தைக் காக்க மயிலேறி வருவாயா கந்தா!

நயினை விசு
இராசநாயகம்.

## பார்மீதி லென்ன பயம்?

கூர்வேலன் நல்லூரில் கொடியேறி விட்டால்
கொடுமைகள் பறந்தோட வேண்டுமே
கொலை, களவு, காம குரோதங்கள்
கூண்டோடு அழிய வேண்டுமே
யார் மீது என்னென்ன குற்றம் குறையிருந்தாலும்
நல்லூர் அவற்றைச் செப்பனிட வைக்குமே
ஆர்தான் இங்கெல்லம் ஆட்டுவித்தாலும் இங்கு
ஆறுமுகம் இருக்க பார்மீதிலென்ன பயம்?

கே.எஸ்.சிவஞானராஜா.

# இராசிபலன்

28.08.2023
ஆவணி 11, திங்கட்கிழமை
துவாதசி பிற்பகல் 03.32 மணிவரை
உத்தராடம் பின்னிரவு 01.17 மணிவரை

சுபநேரம் -12.05-01.3 5 மணிவரை
இராகுகாலம்-07.35-9.05 மணிவரை
பிரதோச விரதம்

சந்திராஷ்டமம்-
மிருகசீரிடம்,திருவாதிரை

வளவன்

**மேஷம்** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள், வந்து சேரலாம். வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம்தரும், செய்தொழில் மேன்மையுண்டு, காரியஅனுகூலமுண்டு.

**ரிஷபம்** சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், மனக் குழப்பங்கள் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள்.

**மிதுனம்** மனதில் இனம் புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும்,சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, வரவுக்கு மிஞ்சிய விரயங்கள் ஏற்படலாம்.

**கடகம்** வராத உறவினர்கள் உங்கள் வீடுகளுக்கு திடீரெனவருகைதரும் வாய்ப்புண்டு, அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்** இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும்நாள், நீடித்த நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள்,எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்,காரிய அனுகூலமுண்டு.

**கன்னி** தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், உறவினர் நண்பர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும் வாய்ப்புண்டு, உதிரி வருமானங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**துலாம்** ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், வீட்டைச் சீரமைப்பதில்ஆர்வம் காட்டுவீர்கள், நம்பிவந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழும் நாள்.

**விருச்சிகம்** பாராட்டும் புகழும் கூடும் நாள் ,பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்,உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**தனுசு** நீண்டநாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்நாள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**மகரம்** வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பெரியோர்களின் உதவியால் சில நன்மைகள் நடைபெறலாம்,தொழிலில் நீண்ட நேரம் பணிபுரியும்சூழ்நிலை ஏற்படலாம்.

**கும்பம்** தொழிலில் சில மாற்றங்கள் செய்ய முற்படுவீர்கள், இறை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப விரய ங்கள் கூடும் நாள்,வேலைச்சுமை கூடும் நாள்.

**மீனம்** ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள்,பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள்,தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

கண்ணை இமை காப்பது போல காப்பது இறைவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈ.பி.எப், ஈ.ரி.எப் நிதியங்களை பயன்படுத்த முனையும் அரசாங்கம்

## எதிர்த்து யாழ்.மாவட்ட செயலகம் முன் இன்று போராட்டம்

(யாழ்ப்பாணம்)

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புக்காக ஈ.பி.எப், ஈ.ரி.எப் நிதியங்களை அரசாங்கம் பயன்படுத்த முனைவதற்கு எதிராக யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக இன்று திங்கட்கிழமை மதியம் 12 மணி முதல் 1 மணி வரையில் ஒருமணிநேர அடையாள போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

பல்கலைக்கழக ஊழியர் சங்கம், வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம், அகில இலங்கை அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம், பொது முகாமைத்துவ உதவியாளர் சேவைச் சங்கம், வடமாகாண சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் சங்கம், வடமாகாண கால்நடை போதானாசிரியர் சங்கம், ஸ்ரீலங்காதபால்தொலைத்தொடர்பு சேவை உத்தியோகத்தர் சங்கம், வடமாகாண அரச சாரதிகள் சங்கம் மற்றும் வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தொழிற்சங்கம் ஆகிய 9 சங்கங்கள் இணைந்து போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளன. (நி-33)

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசை அரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். இளங்கலைஞர் மன்றத்தின் நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு நிகழ்வில் நாளை செவ்வாய்க்கிழமை 6.45 மணிக்கு கோண்டாவில் தர்மசாஸ்தா குருகுல இசைப் பயிலகத்தின் வீணை இசை நிகழ்வு நடைபெறவுள்ளது.

இதில் ஸ்ரீ.மனஸ்வினி, சோ.சுபானு, ந.திலக்ஷி, த.ஜெனனி, தி.தாரணி, பா.தரங்கினி, சி.கஜப்ரியா, ஜீ.டினோதா ஆகியோருடன் மிருதங்கம்-சோ.சங்கர்ஷணன், நெறியாள்கை-மகாதேவ சோமசுந்தரசர்மா.

அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள இசையரங்கு நிகழ்வில் பாட்டு ஜெகதீஸ்வரன் மதுஷிகன், வயலின்-இ.நிரோஜன், மிருதங்கம்-ஞா.வசந், மோர்சிங்-நி.மோகனதர்சன் ஆகியோர் பங்குபெறவுள்ளனர். (நி)

# ஒரே தடவையில் பிறந்த மூன்று மழலைகள்



(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையில், தாயொருவருக்கு, ஒரே தடவையில் மூன்று பிள்ளைகள் சுகப்பிரசவமாக பிறந்துள்ளன.

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை, மகப்பேற்று விசேட வைத்திய நிபுணர் அப்புத்துரை சிறிதரன் தலைமையிலான மருத்துவக் குழுவினர் தாய்க்கு பிரசவம் பார்த்தனர்.


மூன்று குழந்தைகளும் தாயும் நலமாக உள்ளனர் என வைத்தியர்கள் தெரிவித்தனர். (நி-33)



சந்நிதியான் ஆச்சிரமத்தால் யாழ்.பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீடம், சைவசித்தாந்தத் துறை மாணவர்களின் கல்விச் சுற்றுலாவிற்காக செல்வச் சந்நிதியான் ஆச்சிரமத்தால் 100,000 ரூபா நிதியுதவி நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. (படம்:-கஜிந்தன்)

# இந்தியாவின் பாதுகாப்பிற்கு பங்கம் ஏற்படக் கூடாது

## சீன ஆய்வுக்கப்பல் தொடர்பில் சித்தார்த்தன் எம்.பி



(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் பாதுகாப்பிற்கு பங்கம் விளைவிக்காத விடயங்களை இலங்கை அரசாங்கம் எடுக்க வேண்டும். அவ்வாறு எடுக்க தவறும்பட்சத்தில் மிக மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடும் என பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கட்சியின் மத்திய குழு கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சீனாவின் உடைய ஆதிக்கம் இலங்கையில் அதிகரிக்குமானால் நாட்டில் இருக்கின்ற மக்களை அது பெரிய அளவில் பாதிக்கும்.

இந்த நிலையில், இந்தியாவிடம் இருந்து கிடைக்கும் பாதுகாப்பிற்கு அச்சத்தை வழங்கும் விதமாகவே சர்ச்சைக்குரிய சீன ஆய்வுக் கப்பல் நாட்டிற்கு வருகை தரவுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் குற்றம் சுமத்தியுள்ளார். (நி-33)

# 20 பவுண் நகைகள் கத்தி முனையில் கொள்ளை

## யாழில் தொடரும் திருட்டுக்களால் அச்சத்தில் மக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சங்கிலியன் வீதியில் உள்ள வீடொன்றினுள் ஓட்டினை கழட்டி உட்புகுந்த முகமூடி கொள்ளை கும்பல் கத்தி முனையில் 20 பவுண் நகைகளை கொள்ளையடித்து சென்றுள்ளது.

சங்கிலியன் வீதியில் உள்ள குறித்த வீட்டினுள் நேற்று முன்தினம் சனிக்கிழமை நள்ளிரவு கூரையை பிரித்து உள்நுழைந்த மூவர் அடங்கிய கொள்ளையர்கள் வீட்டில் இருந்தவர்களை கட்டி வைத்து கத்தி முனையில் வீட்டில் இருந்த 20 பவுண் நகைகளை கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் வீட்டின் உரிமையாளரால் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் கடந்த மூன்று தினங்களில் சுமார் ஒரு கிலோ மீற்றர் சுற்றுவட்ட பகுதிகளில் கொள்ளை கும்பல் இரு கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு கல்வியங்காடு பகுதியில் உள்ள தேவாலயம் ஒன்றினுள் புகுந்த மூவர் அடங்கிய கொள்ளை கும்பல் அருட்தந்தையரை கத்தி முனையில் மிரட்டி, அவரின் 30 ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் தேவாலய உண்டியலில் இருந்த 15 ஆயிரம் ரூபாய் பணம் என்பவற்றை கொள்ளையடித்து சென்றுள்ளது.

அடுத்த நாள் வெள்ளிக்கிழமை நள்ளிரவு திருநெல்வேலி பாற்பண்ணை பகுதியில் உள்ள வீடொன்றின் கூரையை பிரித்து உள்நுழைந்த முகமூடி கொள்ளை கும்பல் வீட்டில் இருந்தவர்களை கட்டி வைத்து, கத்தி முனையில் கொள்ளையிட முயன்ற போது, வீட்டார் கூக்குரல் எழுப்பவே, அயலவர்கள் விழித்துக்கொண்டு, தமது வீட்டு மின் விளக்குகளை ஒளிர விட்டதை அடுத்து கொள்ளை கும்பல் தமது கொள்ளை முயற்சியை கைவிட்டு தப்பி சென்றது.

இந்நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நள்ளிரவு சங்கிலியன் வீதியில் உள்ள வீடொன்றினுள் கூரையை பிரித்து உள்நுழைந்த மூவர் அடங்கிய முகமூடி கொள்ளை கும்பல் 20 பவுண் நகைகளை கொள்ளையடித்து சென்றுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவம் இடம்பெற்று வரும் நிலையில் யாழ்ப்பாணத்திற்கு இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் பெருமளவானோர் வருகை தந்து தங்கி நின்று நல்லூர் ஆலயத்திற்கு சென்று வரும் நிலையில், யாழ்ப்பாணத்தில் முகமூடி கொள்ளையர்களின் கொள்ளை சம்பவம் அதிகரித்து உள்ளமை அவர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. (நி-33)

# வீடு கையளிக்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கபிரியேல் தன்னார்வ உதவி மையத்தின் 100 இலவச வீட்டுத்திட்டத்தின் கீழ் பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றிற்கு வீடு கையளிக்கும் நிகழ்வு பூம்புகார் பகுதியில் இன்று இடம்பெறவுள்ளது. (நி)

# எல்லை தாண்டும் இந்திய மீனவர்களால் தினமும் பாதிக்கப்படும் வடக்கு மீனவர்கள்

## யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனம்

(அராலி)

கச்சதீவை மீட்டால் மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்குமா? தமிழகத் தலைவர்கள் பதில் கூற வேண்டும் என யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனப் பிரதிநிதி மகேஷ் கேள்வி எழுப்பினார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய பிரச்சினை கட்டுப்படுத்த முடியாமல் இருக்கின்றது. இதனால் வடபகுதி மீனவர்கள் தினமும் பாதிக்கப்படுகின்றார்கள்.

இந்நிலையில் கடந்த வாரம் தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க ஸ்டாலின் மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு கச்சதீவை மீட்பது தான் வழியென கூறியுள்ளார்.

கச்சதீவை இந்தியாவுக்கு வழங்கி விட்டால் வடபகுதி கடலில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய தொழில் நடவடிக்கையை கட்டுப்படுத்த முடியுமா?

கச்சதீவு எங்களிடம் இருக்கின்ற போதே காங்கேசன்துறை தொடக்கம் மன்னார் குதிரை முனை மற்றும் திருகோணமலை வரை இந்திய மீனவர்கள் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

கச்சதீவில் நிரந்தரமாக இந்திய மீனவர்களை தங்க விட்டால் இலங்கையின் முழுக் கடலையும் நாசப்படுத்தி மீனவ மக்களின் வாழ்க்கையை சீரழித்து விடுவார்கள் என அவர் தெரிவித்தார். (நி-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 160 | 160 | 240 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 220 |
| பச்சைமிளகாய் | 300 | 400 | 450 | 400 |
| தக்காளி | 200 | 160 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 |
| கோவா | 250 | 250 | 300 | 250 |
| கரட் | 350 | 480 | 450 | 500 |
| பூசணி | 80 | 100 | 100 | 80 |
| புடோல் | 80 | 80 | 100 | 100 |
| வாழைக்காய் | 150 | 200 | 240 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 200 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 200 | 240 |
| பாகற்காய் | 350 | 350 | 300 | 350 |
| வெண்டக்காய் | 100 | 120 | 100 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 140 | 180 | 200 |
| பயற்றங்காய் | 250 | 200 | 150 | 200 |
| லீக்ஸ் | 200 | 200 | 200 | 200 |
| பீற்றூட் | 150 | 120 | 150 | 150 |
| கறிமிளகாய் | 300 | 250 | 300 | 250 |
| முருங்கைக்காய் | 250 | 300 | 300 | 200 |
| போஞ்சி | 350 | 450 | 500 | 500 |
| சுத்தரிதம்புள்ள | 100 | 120 | 180 | 200 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 80 | 100 |
| தேசிக்காய் | 450 | 500 | 800 | 1000 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 80 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 400 | 400 | 300 |
| வெங்காயப்பூ | 200 | 250 | 250 | 400 |
| முள்ளங்கி | 80 | 100 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 160 | 50 | 60 |
| ஈரப்பலா | 80 | 60 | 100 | 120 |

# மற்றுமொரு நுண்ணுயிர் கொல்லி மருந்திற்கு தற்காலிக தடை

(கொழும்பு)

Co-amoxiclav எனப்படும் நுண்ணுயிர் கொல்லி மருந்தின் பயன்பாடு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளர் ஒருவர், குறித்த நுண்ணுயிர் கொல்லி மருந்து செலுத்தியதை தொடர்ந்து உயிரிழந்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வெட்டுக் காயத்திற்கு சிகிச்சை பெறுவதற்காக வரக்கா பொலயிலிருந்து வந்த 50 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். குறித்த 21,000 தடுப்பூசிகளை கொண்ட மருந்து தொகுதியிலிருந்து 18,000 தடுப்பூசிகள் இதுவரை பயன்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அவற்றில் ஒரு தடுப்பூசி தொடர்பில் மாத்திரமே இந்நிலை பதிவாகியுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழு மூலமாகவும் விசாரணை முன்னெடுக்கப்படுகின்றது. (நி)

# இந்த வருட வரவு-செலவுத் திட்டம் சவாலானதாக அமையும்

## நிதி இராஜாங்க அமைச்சர்



(கொழும்பு)

2024 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்திற்கான அமைச்சுக்களின் செலவின முன்மொழிவுகள் குறித்த மீளாய்வு இன்று முதல் அடுத்த மாதம் 10 ஆம் திகதி வரை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சின் செயலாளரின் தலைமையில் அந்த அமைச்சுகளுக்குப் பொறுப்பான அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் இது தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், இந்த வருட வரவு -செலவுத் திட்டம் சவாலான ஒன்றாக இருக்கும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 26 - 06 - 1948

உதிர்வு 07 - 09 - 2022



அமரர். திருமதி.

## தங்கவேல் சிவமலர்

சீர்வருடம் சுபகிருது சேர்தமிழ் ஆவணியில்
பூர்வபக்க துவாதசியில் பார்விடுத்த- சீர்நிறைந்த
தங்கவேல் சிவமலர் தாங்கியோர் மனம் தவிக்க
சங்கரன் பதமுற்றார் சார்ந்து.

அல்வாய். (சி-7147) குடும்பத்தினர்.

# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம்-2023

## தற்காலிக கடை இட ஒதுக்கீடு

ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் 14.09.2023 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தலத்தில் மஹோற்சவ காலத்தில் தற்காலிக கடைகள் அமைப்பதற்கு இடம் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. கடைகள் தொகுதி வாரியாகப் பின்வரும் வகையில் அமையும்.

1. ஐஸ்கிறீம்
2. இனிப்பு வகை
3. தேநீர் கடை
4. மணிக்கடை
5. கச்சான் கடை

முக்கிய குறிப்பு-

- முதல் மூன்று கடைத் தொகுதிகளுக்குமான இடம் பகிரங்க ஏலத்தில் கூடிய கூறுவிலைக்கு வழங்கப்படும். ஏனைய தொகுதிக்கான அறவீடு அடிக்கணக்கில் அறவிடப்படும்.
- அக்கறையுடைய வர்த்தகர்கள் முன்கூட்டியே இட ஒதுக்கத்தைப் பெற்று தொடர்பான வாடகைப் பணத்தை முழுமையாகச் செலுத்தி உங்கள் இடங்களை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
- விபரங்கள் வழங்க வேண்டிய படிவங்களை கோவில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
- தளம்போடும் நாள் 01.09.2023 வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணி.

(சி-7146)

துன்னாலை வடக்கு, பருத்தித்துறை. தொலைபேசி: 021 226 3074 அறங்காவலர் சபை.

# திறப்பு விழாவும் கௌரவிப்பும்

கு.ஸ்ரெல்லா

ஸ்தாபகர், கபிரியேல் தன்னார்வ உதவி மையம் (சுவிஸ்லாந்து)

100 இலவச வீட்டுத் திட்டத்தின் கீழ்

பூம்புகார், யாழ்ப்பாணம் (வடக்கு மாகாணம்)

எனும் பகுதியில்

28.08.2023 இன்று திங்கட்கிழமை

கௌரவ.திருமதி.கே.சுதாகரி (தனிச்செயலர், கபிரியேல் தன்னார்வ உதவி மையம்)

அவர்கள் தலைமையில்

பிரதம விருந்தினர்

கௌரவ திரு.அன்ரன் பாபு

கௌரவ திருமதி.பாபுகாந்தி

ஆகியோர்களால் இலவச வீடு

திறந்து வைக்கப்பட்டு,

சிறப்பு விருந்தினர்,

கௌரவ றொபேட் றோசா(பொலிகண்டி)

அவர்களால் கல்வெட்டும் திறக்கப்பட்டு

பெண் தலைமைத்துவ பயனாளி,

திருமதி. யோகராசா கெய்சா

அவர்களிடம் கையளிக்கப்படுகின்றது.

(16865)

கபிரியேல் பிறைவேட் லிமிடெட்,
கபிரியேல் பெண்கள் அமைப்பு,
கபிரியேல் தன்னார்வ உதவி மையம் (சுவிஸ்லாந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 187

### இன்று உலகமே திரும்பிப் பார்த்தது!



நியூயார்க்: கிரிப்டோ கோப்பை செஸ் தொடரில் உலக செஸ் சம் பியன் மேக்னஸ் கார்ல் சனை தமிழ்நாட்டு வீரர் ரமேஷ்பாபு பிரக்ஞானந்தா வீழ்த்தி வெற்றிபெற்றார்.

கடந்த ஒரு வாரமாக அமெரிக்காவின் புளோரிடாவில் கிரிப்டோ கோப்பை செஸ் தொடர் நடந்து வருகிறது.

இந்த தொடர் செஸ் போட்டிகளில் முக்கியமான ஒரு தொடர் ஆகும். சர்வதேச அளவில் ரேங்கை உயர்த்திக் கொள்ள இது முக்கியமான ஒரு தொடராக பார்க்கப்படுகிறது.

இதில்தான் கார்ல்சன் வென்று சம்பியன் பட்டம் பெற்றுள்ளார். ஆனால் அதே சமயம் இவர் ரமேஷ்பாபு பிரக்ஞானந்தாவை எதிர்கொண்ட போட்டியில் அவரிடம் தோல்வி அடைந்துள்ளார்.

இந்த தொடருக்கு முன்பாக நடந்த சம்பவம் ஒன்றுதான் இணையம் முழுக்க வைரலாகி வருகிறது.

இந்த தொடரில் கார்ல்சன் ஆடுகிறார் என்பதே அந்த போட்டி நடக்கும் இடம் முழுக்க பெரிய விடயமாக பார்க்கப்பட்டது.

அன்று போட்டிக்கு முன் கார்ல்சனை பார்க்க ஏகப்பட்ட செய்தியாளர்கள் காத்து இருந்தனர்.

அவரின் ரசிகர்கள் பலர் காத்து இருந்தனர்.

ஏன் சக செஸ் வீரர்கள் கூட அவருடன் போட்டோ எடுக்க வேண்டும் என்று காத்து இருந்தனர். இதனால் அவர் ஹீரோ போல அங்கே கவனிக்கப்பட்டார்.

அவர் நின்று கொண்டு இருந்த அதே காரிடாரில் பிரக்ஞானந்தாவும் நின்று கொண்டு இருந்தார். தன்னுடைய பயிற்சியாளருடன் பிரக்ஞானந்தா பேசிக்கொண்டு இருந்தார்.

கதவு ஓரம் இருந்த அவரை அங்கு இருந்த செய்தியாளர்கள் யாரும் கண்டு கொள்ளவில்லை. சக வீரர்கள் கூட சென்று விசாரிக்கவில்லை. செஸ் உலகில் பிரக்ஞானந்தா பிரபலம் என்றாலும் அவரை அடையாளம் காணாமல் இவர்கள் கார்ல்சனை மட்டும் பேட்டி எடுத்துக்கொண்டு இருந்தனர்.

பொதுவாக இளம் வீரர்களுக்கு இது போன்ற விடயங்கள் பிரஷரை கொடுக்கும். இவ்வளவு பிரபலமான வீரரை நாம் எதிர்கொள்ள போகிறோமா என்ற பிரஷர் இவர்களுக்கு ஏற்படும்.

ஆனால் இன்று அந்த பிரஷர் எதுவும் இன்றி இயல்பாக ஆடினார் பிரக்ஞானந்தா. அதோடு எல்லோரும் வெற்றிபெறுவார் என்று நினைத்த கார்ல்சனை வீழ்த்தி அங்கு இருந்த மீடியாக்களை திரும்பி பார்க்க வைத்தார். எந்த மீடியா தன்னை கவனிக்கவில்லையோ அதே மீடியா முன் சிறப்பாக ஆடி வெற்றி பெற்றார். தன்னை யாரும் கண்டுகொள்ளாத போதும் அதை பற்றி எல்லாம் கவலைப்படாமல் பிரக்ஞானந்தா ஆடி வென்ற விதம் பலரையும் கவர்ந்தது

எதுவுமே இரண்டு முறை நடந்தால் அது சாதனை கிடையாது. அது வெறும் லக். ஒரு விடயம் பழக்கமாக வேண்டும் என்றால் அது மூன்று முறை நடக்க வேண்டும் என்று கூறியவர் மேக்னஸ் கார்ல்சன். தற்போது அதே மேக்னஸ் கார்ல்சனை 3ஆவது முறையாக வீழ்த்தி அவரை வெற்றிபெறுவதை "பழக்கமாக" மாற்றி இருக்கிறார் தமிழ்நாட்டு வீரர் ரமேஷ்பாபு பிரக்ஞானந்தா.

என்னதான் கார்ல்சன் உலக சம்பியனாக இருந்தாலும் இந்த வருடத்தில் மட்டும் மூன்றாவது முறையாக தமிழ்நாடு வீரர் ரமேஷ்பாபு பிரக்ஞானந்தாவிடம் அவர் தோல்வி அடைந்துள்ளார்.

## வயலுக்குள் புகுந்த கடல்நீர் 560 ஹெக்டேயர் பயிர்கள் அழிவு பார்வையிட்டார் கிம் ஜாங் உன்



(பியாங்யாங்)

வடகொரியாவில் கடல் சீற்றம் காரணமாக நிலப் பகுதிகளில் கடல் நீர் புகுந்த தால் ஏற்பட்ட வெள்ளத்தில் சுமார் 560 ஹெக்டேயர் பயிர் நிலங்கள் அழிவடை ந்துள்ளன.

அழிவுகளை பார்வை யிட்டுள்ள வடகொரிய ஜனா திபதி கிம் ஜாங் உன்,

இது அதிகாரிகளின் பொறுப்பற்ற செயல் கார ணமாக நடந்துள்ளதாக அதிகாரிகளை கடுமையாக சாடியுள்ளார்.

இதேவேளை கிம் ஜாங் உன் வடகொரியாவின் கிழக்குக் கடற்கரையில் அமைந்துள்ள விவசாய நில மறுசீரமைப்புத் திட்டப் பணிகளை பார்வையிடச் சென்றுள்ளார்.

கடல் அலை யின் சீற்றம் காரணமாக கடல் நீர் வயல் நிலங்க ளுக்குள் புகுந்து 270 ஹெக்ரேயரில் பயிரிடப்பட்டி ருந்த நெற்பயிர்கள் உட்பட 560 ஹெக்ரேயர் நிலம் அழிவடைந்துள்ளது.

இந்த அழிவுகளை பார் வையிட்ட ஜனாதிபதி கிம், நாட்டின் பிரதமர் கிம் டோக் ஹூன் மற்றும் அதிகாரி களின் பொறுப்பற்ற செயல் என சாடியுள்ளார்.

மேலும், நாட்டின் பொரு ளாதாரத்தை வீணடித்து விட்டதாகவும் குற்றம் சும த்தியுள்ளார்.

கடந்த சில ஆண்டு களாக கிம் டோக் ஹூன் அமைச்சரவையின் நிர் வாகம் பொருளாதார நிலைமை என்பன மிகவும் சீர்குலைந்துள்ளதாகவும் வடகொரிய செய்திகள் தெரி விக்கின்றமை குறிப்பிட த்தக்கது. (நி)

## 48 ம... நாட்... அமெரிக்கா,பிர...

(நியாமே) — அமெரிக்கா,பிரான்... நாட்டைச் சேர்ந்த தூ... நாட்டை விட்டு வெ... ஆட்சியாளர்கள் அ...

மேற்கு ஆபிரிக்காவில் உள்ள நாடு நைஜர். இதன் தலைநகர் நியாமே.இங்கு ஜனாதிபதியாக இருந்த மொகமெட் பசோம் ஜன்தா எனப்படும் இராணுவ குழு நடத்திய சிறு கிளர்ச்சியால் கடந்த ஜூலை மாதம் 26 ஆம் திகதி அன்று பதவியில் இருந்து தூக்கி எறியப்பட் டார்.

இவருக்கு பதிலாக கிளர்ச்சி யாளர்கள் அமைப்பின் தலை

வர் அ... தன்... யாக ... சியில் ... ஜனா... தினரு... பதாக ... நா... பட்டு ... உத்த... இந்த ... பேர்க... அமை...

## புளோரிடாவில் நிறவெறி தாக்குதல் மூன்று கறுப்பினத்தவர்கள் பலி

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் புளோரிடா ஜக்சன்வில் பகுதியில் இடம் பெற்ற நிறவெறி தாக்குதலில் மூன்று கறுப்பினத்தவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

வெள்ளையினத்தை சேர்ந்த நபர் ஒருவர் வர் த்தக நிலை யமொன்றிற்குள் புகுந்து துப் பாக்கி பிரயோகத்தை மேற் கொண்டதில் மூவர் கொல்ல ப்பட்டுள்ளனர்.

இரண்டு ஆண்களும் ஒரு பெண்ணும் கொல்லப் பட்டு ள்ளனர் என அதிகாரி யொரு வர்தெரிவித்துள்ளார்.

நிறவெறி காரணமாக இழை க்கப்பட்ட குற்றம் என நகர மேயர் தெரிவித்துள்ளார். (நி)

## மாணவர்கள் லீவு போட்டால் பெற்றோர்களுக்கு சிறைத்தண்டனை சவுதி அரேபியாவில் புதிய சட்டம்



(றியாத்)

சவுதி அரேபியாவில் உள்ள பாடசாலைகளில் மாணவர் களின் வருகை விதி களை அந்நாட்டின் அரசு கடுமையாக்கி உள்ளது. அதன்படி,சவுதி அரே பியாவில் மாணவர்கள் முறை யான காரணம் இன்றி 20 நாட்களுக்கு மேல் பாடசாலைக்கு விடுப்பு எடுத்தால் பெற்றோ ருக்கு சிறைத் தண்டனை வழ ங்க ப்படும் என்று அந்நாட்டு அரசு புதிய சட்டத்தை கொண்டு வந்துள்ளது. இதில், பெற் றோர்கள் கைதாகும் பட்ச த்தில் சம்பந்தப்பட்ட மாணவர்கள் காப்பகத்தில் தங்க வைக்கப்படு வர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கடும் நடவடிக்கை நாட்டின் சிறுவர் பாதுகாப்புச் சட்டத்திற்கு ஏற்றதாகவும், எதிர்வரும் கல்வியா ண்டில் கல்வியின் தரத்தை உயர்த்து வதை நோக்கமாகக் கொண்ட தாகவும் தெரிவிக்கப்பட்டுள் ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிநேர கால அவகாசம்! டைவிட்டு வெளியேறுங்கள்!

## கா,பிரான்ஸ்,ஜேர்மனி மற்றும் நைஜீரியா தூதர்களுக்கு நைஜர் உத்தரவு

**பிரான்ஸ்,ஜேர்மனி மற்றும் நைஜீரியா ந்த தூதர்களை 48 மணி நேரத்திற்குள் டு வெளியேறுமாறு நைஜர் ஜன்தாவை ள் அறிவித்துள்ளனர்.**

வர் அப்துரஹ்மானே சியானி தன்னைத்தானே ஜனாதிபதியாக அறிவித்து கொண்டு ஆட்சியில் அமர்ந்தார். முன்னாள் ஜனாதிபதியும் அவர் குடும்பத்தினரும் சிறை வைக்கப்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது.

நாட்டின் எல்லைகள் மூடப்பட்டு அந் நாட்டில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஜன்தா அமைப்பு 21 பேர்களை கொண்ட ஒரு புதிய அமைச் சரவையையும் அறிவித்துள்ளது.

இந்நிலையில் மேற்கு ஆபிரிக்க நாடுகளின் பொருளாதார கூட்டமைப்பான எகோவாஸ் இந்த ஆட்சி மாற்றத்தை அங்கீகரிக்கவில்லை. மீண்டும் பசோம் பதவியில் அமர்த்தப்பட வேண்டுமென்று ஜன்தா அமைப்பிற்கு எகோவாஸ் எச்சரிக்கை விடுத்தது. ஆனால், இதற்கு ஜன்தா பணியவில்லை. நைஜரில் அமைதியான முறையில் ஜனநாயக



ஆட்சியை மீண்டும் கொண்டு வர அமெரிக்கா உட்பட பல நாடுகள் முயற்சித்தன. ஆனால் அவையும் தோல்வியில் முடிந்தது.

ஓகஸ்ட் 18 அன்று, "முடிவில்லாத பேச்சுவார்த்தையை ஜன்தா அமைப்புடன் நடத்த முடியாது. திகதி அறிவிக்காமல் ஒரு முக்கிய நாளில் இராணுவ ரீதியாக நைஜரில் ஜன நாய கத்தை மலரச் செய்வோம்" என எகோவாஸ் அமைப்பு அறிவித்தது.

இந்த எச்சரிக்கையையும் ஜன்தா அலட்சியப்படு த்தியது. இந்நிலையில் தற்போதைய நைஜர் அரசு, பிரான்ஸ், ஜேர்மனி, நைஜீரியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளை சேர்ந்த தூதர்கள், நைஜரை விட்டு 48 மணி நேரத்திற்குள் வெளியேற வேண்டும் என அறிவித்துள்ளது. "நைஜர் ஜன்தாவை ஆட்சியாளர்களா கவே நாங்கள் அங்கீகரிக்க வில்லை" என பிரான்ஸ் நாடு உடனடியாக பதிலளித்தது.

தொடர்ந்து நடக்கும் ரஷ்ய - உக்ரைன் போரினால் சரிந்து வரும் உலக பொருளாதாரம், மற் றொரு போர் நைஜரில் ஏற்பட்டால் மேலும் பாதிப் படையலாம் என அரசியல் வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். (நி)

---

## ..தல் ..லி

..ளும் ஒரு ..லப் பட்டு ..ாரி யொரு ..

..மாக இழை .. என நகர ..ார். (நி)

..கள் முறை ..இன்றி 20 ..சாலைக்கு .. பெற்றோ ..னை வழ .. அந்நாட்டு .. கொண்டு ..ல், பெற் .. பட்ச த்தில் ..ணவர்கள் ..வைக்கப்படு ..பட்டுள்ளது. ..வடிக்கை ..ாதுகாப்புச் ..றதாகவும், ..பா ண்டில் .. உயர்த்து .. கொண்ட ..கப்பட்டுள் .. (நி)

---

## சிம்பாவேயின் ஜனாதிபதியாக மீண்டும் இமேர்சன்



(சிம்பாவே)

சிம்பாவே ஜனாதிபதி தேர்தர்தலில், ஜனாதிபதி இமேர்சர்ன் நன்கக்வா இரண்டாவது முறையாக தெரிவாகியுள்ளார்.

52.6 சதவீதமான வாக்குகளை பெற்று அவர் தெரிவாகியுள்ள போதிலும் பரந்த அளவில் வாக்கு மோசடிகள் நடந்துள்ளதாக எதிர்கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

தேர்தல் வாக்குப்பதிவு நடவடிக்கைகள் சர்வதேச தரத்தை கொண்டிருக்கவில்லையென தேர்தலை கண்காணிக்கும் பார்வையாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த 2017 ஆம் ஆண்டு சிரேஷ்ட அரசியல்வாதியான ரொபேட் முகாபேக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஆட்சி கவிழ்ப்பையடுத்து இவர் ஆட்சி நிர்வாகத்தை பொறுப்பேற்றார்.

சர்வ தேச ரீதியாக பெரும் பண வீக்கம், வறுமை, வேலையில்லா பிரச்சினை மற்றும் பாதுகாப்பற்ற சூழலில் சிம் பாவே மக்கள் வாழ்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

---

## சந்திரயான்-3 திட்டத்தின் இரு இலக்குகள் நிறைவு அடுத்த சோதனை தீவிரம்- இஸ்ரோ அறிவிப்பு

(டில்லி)

சந்திரயான்-3 திட்டத்தில் முக்கியமான 2 இலக்குகள் வெற்றிகரமாக முடிக்கப்பட்டதாகவும், தற்போது அறிவியல் பரிசோதனைகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோ தெரிவித்துள்ளது.



கடந்த ஜூலை மாதம் 14 ஆம் திகதி எல் வி எம்-3 ரொக்கெட் மூலம் சந்திரயான்-3 விண்கலம் இஸ்ரோ நிறுவனத்தால் விண்ணுக்கு செலுத்தப்பட்டது.

விண்வெளியில் 41 நாள் பயணத்துக்கு பின் நிலவின் தென்துருவப் பகுதிக்கு அருகே சந்திரயான்-3 விண்கலத்தின் லேண்டர் பாகம் ஓகஸ்ட் 23 ஆம் திகதி மாலை 6.04 மணிக்கு வெற்றிகரமாக தரையிறங்கியது.

மூன்று தடவைகளின் முயற்சியின் பின் சந்திரயான்-3 வெற்றிகரமாக தரையிறங்கப்பட்ட அதே வேளை நிலவின் தென் துருவத்தில் தரையிறங்கிய முதல் நாடு எனும் பெருமையை இந்தியா பெற்றது.

இதனை தொடர்ந்து, சில மணி நேரங்களுக்கு பின்னர் லேண்டரில் இருந்த ரோவர் வாகனம் பத்திரமாக நிலவின் தரைப்பகுதிக்கு கொண்டு வரப்பட்டது. தற்போது ரோவர் வாகனம் நிலவின் மேற்பரப்பில் ஊர்ந்து சென்று ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றது.

இதற்கிடையே, சந்திரயான்-3 விண்கலத்தின் லேண்டர் நிலவில் தரையிறங்கிய பகுதிக்கு 'சிவசக்தி' என்று பெயரிடப்பட்டதோடு அது வலம் வரும் படங்களின் தொகுப்பை இஸ்ரோ வெளியிட்டது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரின்றி கருகும் பயிர்கள் வருமானமின்றி தவிக்கும் மக்கள்





(தருமபுரம்)

தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக பெருமளவான பயிர்ச்செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் தருமபுரம், விசுவமடு, நெத்திலி ஆறு போன்ற பகுதிகளில் அதிகமான விவசாயிகள் வாழை, தென்னை, கமுகு போன்ற பயிர்களை மேற்கொண்டு அவ் வருமானத்தில் தமது வாழ்வாதாரத்தை நடத்தி வருகின்றனர்.

கல்மடுக்குளத்தில் இருந்து பெறப்படுகின்ற நீரையே பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்துவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

முன்னைய காலங்களில் இம்மாதம் அளவில் கடுமையான மழைவீழ்ச்சி காணப்படும். இம்முறை இதுவரை மழை இல்லாததால் மிக அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் வாழை மற்றும் தேங்காய் உற்பத்தியும் குறைந்து காணப்படுவதாகவும் அவர்கள் கவலை வெளியிட்டனர்.

நீரில்லாததால் வாழைக்குலைகள் சிறிய அளவில் காணப்படுவதாகவும் அதனை உரிய விலைக்கு விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கவலை தெரிவித்துள்ளனர். அத்துடன் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசாங்கம் நட்டஈடு தர வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்தனர். (நி-316)

# வறட்சியால் பாதிப்படையும் சிறுபோக நெற்செய்கை



(கண்டாவளை)

மல்லாவி குளத்தில் தண்ணீர் இல்லாததால் சிறுபோக நெற்செய்கை முழுமையாக கருகிய நிலையிலும் அழிவடைந்தும் காணப்படுகின்றன.

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேசத்திற்கு உட்பட்ட வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள மல்லாவிக்குளத்தின் கீழ் இவ்வாண்டு 42 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு இரண்டு மாதங்கள் கடந்துள்ளன.

இந்த நிலையில் மேற்படி குளத்தில் தண்ணீர் இல்லாததால் சிறுபோக நெற்செய்கை முழுமையாக நீரின்றி கருகிய நிலையிலும் அழிவடைந்தும் காணப்படுகின்றன.

இதில் குறிப்பிட்ட சில விவசாயிகள் வேறு பிரதேசங்களில் இருந்து தண்ணீர் பௌசர்களில் தண்ணீர் கொண்டு வந்து தமது வயலை பாதுகாத்துக் கொள்வதற்கான முயற்சிகளை செய்து வருகின்றனர். அத்துடன் குளத்தில் முழுமையாக நீர் வற்றியதால் நன்னீர் மீனவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். (நி-315)

# கண்டாவளை கமநல சேவை நிலையத்தின் பெயர்ப் பலகையை சேதப்படுத்திய விஷமிகள்

(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளை கமநல சேவை நிலையத்தின் பெயர்ப் பலகை விஷமிகளால் சேதமாகப்பட்டுள்ளது.

கிளிநொச்சி முரசுமோட்டையில் அமைந்துள்ள கண்டாவளை கமநல சேவை நிலையமானது முரசுமோட்டையில் அமைந்துள்ள நெற்களஞ்சியசாலையில் இயங்கி வந்த நிலையில் குறித்த நிலையத்தின் செயற்பாடுகள் முரசுமோட்டை 03 ஆம் யுனிற் பகுதியில் அமைந்துள்ள தனியார் வீடொன்றிற்கு இம்மாத முற்பகுதியில் மாற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு மாற்றப்பட்டதை யடுத்து அதற்கான பெயர் பலகை ஏ-35 வீதியின் முரசுமோட்டைப் பகுதியில் கடந்த வாரம் அமைக்கப்பட்ட நிலையில் குறித்த பெயர்ப் பலகையானது மறுநாளே விஷமிகள் சிலரால் அடித்துச் சேதமாக்கப்பட்டுள்ளது. (நி-315)




# வினாடி வினாப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற கிளி/முக்கொம்பன் ம.வித்தியாலயம்







(அக்கராயன்)

கிளிநொச்சி முக்கொம்பன் மகா வித்தியாலயம் வினாடிவினாப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுள்ளது.

கிளிநொச்சி தெற்கு வலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற பூநகரி கோட்ட மட்ட விவசாய வினாடி வினா போட்டியில் இப்பாடசாலை மாணவர்கள் முதல் மூன்று இடங்களையும் பெற்று தமது திறமைகளை வெளிக்காட்டி யுள்ளனர்.

பு.புகழினி - 1 ஆம் இடம், கே.சருஷ்ரிகா - 2ஆம் இடம், சு.பரணிகா - 3 ஆம் இடம் ஆகிய இடங்களைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர். (நி-350)

# புதிதாக அமைக்கப்பட்ட மதுபான நிலையங்கள்; அமைவிடத்தை மாற்றக்கோரி ஆளுநருக்கு கடிதம்



(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்குகின்ற மது விற்பனை நிலையங்களின் அமைவிடத்தினை மாற்றம் செய்யக்கோரி பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வட மாகாண ஆளுநருக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுகளில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மதுபான விற்பனை நிலையங்கள் மக்கள் செறிவும் நடமாட்டமும் அதிகரித்துள்ள பகுதிகளிலும் பாடசாலைகள் மதத்தலங்கள் என்பவற்றிற்கு அருகிலும் அமைக்கப்பட்டுள்ளமையால் அப்பிரதேச மக்கள் தேவையற்ற இடர்பாடுகளை எதிர்கொள்ள வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

மக்கள் நலனுக்கும் மக்களது இயல்பு வாழ்வுக்கும் பொருத்தமற்ற வகையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மூன்று மதுபான விற்பனை நிலையங்களையும் மாற்றம் செய்யுமாறும் அந்தந்த பகுதி மக்களினாலும் சமூகமட்ட அமைப்புகளினாலும் தொடர் கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த 2023.06.01 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இவ் விடயம் தொடர்பில் என்னால் முன்வைக்கப்பட்ட கருத்துகளின் அடிப்படையில் அப் பிரதேச மக்களினதும் கோரிக்கைக் கமைவாக மேற்படி மூன்று மதுபான விற்பனை நிலையங்களையும் சனச்செறிவு குறைந்த பகுதிகளுக்கு இடம் மாற்றம் செய்வது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள போதும் இன்றளவும் அதற்குரிய நடவடிக்கைகள் எவையும் முன்னெடுக்கப்படாமல் உள்ளமை பாதிக்கப்பட்ட மக்களை விசனத்திற்கு உள்ளாக்கி உள்ளது.

எனவே இது விடயம் தொடர்பில் உயரிய கரிசனை கொண்டு மேற்குறித்த மது விற்பனை நிலையங்களையும் பொது மக்கள் பாதிப்புறாத வகையில் பொருத்தமான இடங்களுக்கு மாற்றம் செய்ய ஆவண செய்யுமாறு தங்களைக் கேட்டுக் கொள்கின்றேன் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கடிதத்தின் பிரதிகள் கிளிநொச்சி மாவட்டச் செயலாளர், கரைச்சி பிரதேச செயலாளர் சமூக மட்ட அமைப்புகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (நி-350)

# போராட்டத்தில் ஈடுபடும் பொன்னாவெளி மக்களை சந்தித்த ஜே.வி.பியினர்



(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி பொன்னாவெளியில் சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிராக போராடுகின்ற மக்களை ஜே.வி.பியினர் நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

சுண்ணக்கல் அகழ்வு நடைபெற உள்ள இடங்களையும் ஜே.வி.பியினர் பார்வையிட்டதுடன் மக்களின் போராட்டத்திற்கு ஆதரவு வழங்குவதாகவும் கொழும்பிற்கு போராடும் மக்களின் நியாயங்களை எடுத்துச் செல்வதாகவும் பொன்னவெளி மக்கள் கொழும்பில் போராட்டம் நடத்துவது என்றாலும் ஜே.வி.பி முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக தெரிவித்தனர். சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிராக நேற்றுடன் 25 நாட்கள் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## வேம்பும் வேப்பங்கள்ளின் மருத்துவ குணங்களும்

Botanical Name - Azadirachta indica
Family - Meliaceae



இந்தியா, இலங்கையைச் சார்ந்த மரம். இதனுடைய இலைகள், குருத்திலைகள் பூக்கள், விதைகள், பழங்கள் பட்டை, வேப்பங்கூர், வேர் இத்துடன் வயதான வேம்பிலிருந்து சுரக்கப்படும் வேப்பங் கள் (Neem +oddy) அனைத்துமே மருத்துவ குணங்கள் மிகுந்தவை.

100 வயதுடைய வேம்பின் பாகங்கள் சிறப்பான மருத்துவ பண்புகள் மிக்கவை. வேப்ப மரத்திலிருந்து சுரக்கப்படும் பிசின் கூட மருத்துவத்தில் பயன் படுத்தப் படுகின்றது. வேப்பம்பூவுடன் சிறிது இஞ்சி, கொத்தமல்லி, இவற்றை சேர்த்து துவையலாக அரைத்து காலை உணவோடு உட கொண்டு வந்தால் பித்தப்பை நோய்கள் தணியும்.

வேப்பம் பூக்களை சேகரித்து அவற்றை நிழலில் உலர்த்தி பின் மண்பானையில் போட்டு வைக்க வேண்டும். 30 நாட்கள் கழித்து பூக்களை எடுத்து லேசாக வறுத்துக் கொள்ள வேண்டும் இரண்டையும் மீண்டும் இடித்து சிறிது உப்பிட்டு கொண்டு காலை உணவிற்கு முன் ஒரு தேக்கரண்டி அளவு உட்கொள்ள வேண்டும். இப்படி செய்து கொண்டு வந்தால் வாந்தி, குமட்டல், வயிற்றுப் பொருமல், குடற்புழு, ஆஸ்துமா சம்பந்தப்பட்ட நோய்கள் குணமடையும்

தோலில் ஏற்படும் சொறி, சிரங்கு நீங்க வேப்பங் கொழுந்து இலைகளை மை போல அரைத்து தேய்த்து குளிப்பாட்ட வேண்டும். வேப்பங் கொழுந்து 2 கிராம் அளவு தினமும் காலையில் உட்கொண்டு வர நீரிழிவு நோயை கட்டுப்படுத்தலாம். வேப்பிலையோடு சிறிது மஞ்சள் சேர்த்து அரைத்தும் சொறி, சிரங்கிற்கு பற்றிடலாம்.

100 கிராம் அளவிற்கு முற்றிய காய்களின் சதையை எடுத்து தேங்காய் எண்ணெய் 300 கிராமில் போட்டு காய்ச்சி எடுத்து அவ்வெண்ணையை தோலில் ஏற்படும் தடிப்பு, அரிப்பிற்கு மேல் பூசி வந்தால் விரைவில் குணமடையும்.

பச்சை வேப்பம் பட்டையின் காய்ந்த பகுதியை மட்டும் நீக்கி விட்டு பஞ்சு போல் இடித்துக் கொள்ள வேண்டும். பின்னர் ஒரு மட்கலத்தில் 300 மில்லி பசுப்பாலை ஊற்றி பானையின் வாயில் ஒரு சுத்தமான பருத்தித்துணியை தொய்வாக கட்டி அதன்மேல் இடித்த தூளை வைத்து மூடி சிறுதீயாக எரிக்க வேண்டும். பால் முக்கால் பங்கு சுண்டியதும் இறக்கி தூளை எடுத்து நிழலில் உலர்த்தி இடித்து வைத்துக் கொள்ளவும். காலை இரவு உணவிற்குப் பின் 1/2தேக்கரண்டி உட்கொண்டு வந்தால் நீரிழிவு கட்டுப்படுவதுடன் நீரிழிவு நோயால் ஏற்படும் உபத்திரங்களையும் தவிர்த்துக் கொள்ளலாம். 300 கிராம் வேப்பெண்ணெயில் 100 கிராம் வேப்பம் பருப்பை போட்டுக் காய்ச்சி இறக்கி வடித்து ஆறாத புண்கள் குஷ்டரோகப் புண், நீரிழிவு நோயாளர்களுக்கு ஏற்படும் புண்களுக்கு மேல் தடவி வர குணமாகும்.

வேப்பம் பூக்கள்ள சிறிது நிழலில் உலர்த்தி தேனில் ஊற வைத்து வேம்பம் பூ குல்கந்து தயாரித்து வைத்துக் கொள்ளவும் விரைவில் கெட்டுப் போகாது. இரவு தூங்குவதற்கு முன்பு ஒரு சிறு உருண்டை இந்த வேப்பம்பூ குல்கந்தை வாயில் போட்டு விழுங்கிவிட்டு வெந்நீர் குடித்து வர உடல் பலம் பெறும். பயன்படுத்தும் தேன் தூய தேனாக இருக்க வேண்டும்.

வேப்பிலையை அரைத்து ஒரு துணியில் முடிச்சாகக் கட்டிப் பிழிந்தால் சாறு வரும் தினம் 2 தேக்கரண்டி சாறு குடித்து வர முகப்பருக்கள், முகத்தில் ஏற்படும் வடுக்களும் இல்லாமல் அகன்று விடும்.

கொசுக்களை விரட்டுவதற்கு வேப்பம் இலைகளையும் விதைகளையும் சம அளவாக எடுத்து அரைத்து சிறு அடையாகத் தட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும். ஒரு சட்டியில் நெருப்புத் தணலைப் போட்டு தீ தாங்கும் அளவிற்கு அடைகளைப் போட்டு விரல் அளவு துவாரம் உள்ள சட்டியால் மூடி விட வேண்டும் இதை வீட்டுக்குள் வைத்து 30 நிமிடங்கள் வீட்டைப் பூட்டி வைக்க கொசுக்கள் அதாவது நுளம்புகள் அணுகாது.

100 வயதுடைய வேப்ப மரத்தின் (100 ஆண்டு வளையங்களுடைய வேம்பு) இலை, பூ, காய், பட்டை வேர் இவைகளை சேகரித்து கழுவி



சிறு துண்டுகளாக நறுக்கி உலர்த்தி பின் அனைத்தையும் ஒன்றாக கலந்து இடித்து பொடித்து அரித்து சுத்தமான கண்ணாடிப் போத்தலில் போட்டு இறுக மூடி வைத்துக் கொள்ள வேண்டும் இது தான் வேம்பு காய கற்பமாகும். இந்தப் பொடியில் வெறும் வயிற்றில் தினமும் காலை மாலை 1-2 கிராம் அளவு சுத்தமான தூய தேனில் குழைத்து சாப்பிட்டு வெந்நீர் அருந்த வேண்டும். இவ்வாறு தொடர்ந்து 3 மாதங்கள் சாப்பிட்டு வந்தால் எமது உடற் கலங்களில் ஏற்படும் தேய்மானங்களை தடுத்து நோய் எதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்க செய்து எவ்விதமான நோய்களும் உடலை அணுகாது காத்துக் கொள்ள முடியும்.

வேப்பம் பூக்கள் பூக்கும் காலத்தில் வேப்ப மரத்தின் அடியில் பாயை விரித்துப் போட்டு தானாக உதிரும் பூக்களையும் கொப்புக்களையும் உலுக்கி பெறும் பூக்களையும் சேகரித்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டால் தேவைப்படும் போது பயன்படுத்திக் கொள்ளலாம்.

100 வயதுடைய வேப்பம் மரத்தின் பட்டையை சேகரித்து சிறிது சிறிது துண்டாக நறுக்கி 1 பங்கு பட்டைக்கு 4 பங்கு நீர் விட்டு 1/4 பங்காக குடிநீர் காய்ச்சி 30-60 மில்லி அளவு காலை, மாலை அருந்தி வர மலேரியாக் காய்ச்சல் நீங்கும். அத்துடன் மீண்டும் மீண்டும் வரும் மலேரியாக காய்ச்சலையும் தடுக்கலாம். 100 வயது வேப்பம்பட்டை கிடைக்காவிட்டால் வயதான வேப்பம் பட்டைகளை பயன்படுத்தலாம்.

வேப்பம் பிசின் சற்று சிவந்த நிறமாக இருக்கும். வாயில் எடுத்துப் போட்டால் சிறிது கசப்பும், துவர்ப்புமாக இருக்கும் 40 கிராம் வேப்பம் பிசினை 360 மில்லி தண்ணீரில் ஊறவைத்து அதன் தெளிவை 30 மில்லி வீதம் காலை, மாலை அருந்த சீதபேதி நீங்கி உடல் பலப்படும். நீரிழிவு நோயாளர்களும் பயன்படுத்தலாம்.

வேப்பம் விதைகளை சேகரித்து செக்கிலிட்டு ஆட்டி எண்ணெய் எடுக்கிறார்கள்.





இது தோல் வியாதிகளை போக்க வல்லது பாரிச வாயுவாக இருந்தாலும் சரி வாத வலியாக இருந்தாலும் சரி வேப்பெண்ணெயை தடவி ஒற்றடம் கொடுக்க வலி நீங்கும்.

மாதவிடாய் காலத்தில் ஏற்படும் வயிற்று வலிக்கு வேப்பங் கொழுந்தை அரைத்து 5 கிராம் அளவு எடுத்து 1 கிராம் பூண்டு சேர்த்து விழுங்கவும். ஒரு நாளைக்கு ஒரு தடவை கொடுத்தாலே வலி தணியும் கர்ப்பப்பையையும் பலப்படுத்தும்.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

**வேப்பம் கள் (Neem toddy)**

அரிதாக பெரும்பாலும் வய தான வேப்பம் மரத்தின் பட்டைகள் வெடித்து அதனின்று சுரக்கும் பொருளாக வடியும் பாலே வேப்பம் கள் எனப்படும். செயற்கையாக பட்டைகளை காயப்படுத்தி சேகரிக்க முடியாது. அரிதாகத்தான் கிடைக்கும். வடியும் போது இதனை சேகரித்து வைத்துக் கொள்ளவும். மட்கலத்தில் சேகரித்தல் சிறந்தது.

அறைவெப்பநிலையில் 6 மாதங்கள் கெடாமல் பாதுகாத்து வைத்துக் கொள்ள முடியும். வேப்பம் கள் போசனைகாரி [Nutrient], குளிர்ச்சி உண்டாக்கி (Refrigerant) பண்புகளை கொண்டது உடலை பலப்படுத்தக்கூடியது. பெரும்பாலும் தோல் நோய்கள் வராமலும் தடுக்கவும் கூடியது.

இந்த கள்ளில் அமினோ அமிலங்கள் (Amino acids) காணப்படுவது இன்னும் சிறப்பம்சமாகும். இதனாலே நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்து உடல் பலம் பெறும்.

இதில் 30 மில்லி அளவு காலை, மாலை அருந்தி வரலாம் உடலும் மூளையும் பலப்படும். உடலைத் திடகாத்திரமாக வைத்திருக்கும்.

காய்ச்சல் அல்லது சுரம் மீண்டும் மீண்டும் வருவதைத் தடுக்கும். இதிலிருந்து இதிலிருக்கும். Amino acids ஆவன. Argenine, Tyrosine, Tryptophan, proline,Glutamic acid, Serine, Phenylaminine என்பனவாகும். வேப்பம் கள் மரங்களில் தானாக சுரக்கும் போது சேகரித்து பயன்படுத்தி கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 267





"வேறு யார் சொல்வார்கள்? சேந்தன் அமுதன் தான் சொன்னான்".

"தஞ்சாவூர் வெகு தூரத்தில் இருக்கிறது. அதனாலே தான் அப்படிச் சொல்லித் தப்பித்துக் கொண்டான்"

"இல்லாவிட்டால்?"

"இங்கே என் முன்னால் சொல்லியிருந்தால் அந்தச் சேற்றுக் குழியில் தூக்கிப் போட்டிருப்பேன்."

"அதனால் என்ன? சேற்றை அலம்பிக் கொள்ளக் கடலில் ஏராளமாய்த் தண்ணீர் இருக்கிறதே"

"நீ விழுந்த புதை சேற்றுக்குழியில் மாடு, குதிரை எல்லாம் முழுகிச் செத்திருக்கின்றன. யானையைக் கூட அது விழுங்கி விடும்"

வந்தியத்தேவனுடைய உடம்பு சிலிர்த்தது. அவனை அந்தப் படுகுழி கொஞ்சமாகக் கீழே இழுத்துக் கொண்டிருந்த போது ஏற்பட்ட உணர்ச்சியை நினைத்துக் கொண்டான். இவள் மட்டும் வந்து கரையேற்றியிராவிட்டால் இத்தனை நேரம் அதை நினைத்த போது அவன் உடம்பெல்லாம் நடுங்கிற்று.

"சேந்தன் அமுதன் என்னைப் பற்றி இன்னும் என்ன சொன்னான்?" என்று பூங்குழலி கேட்டாள்.

"நீ அவனுடைய மாமன் மகள் என்று சொன்னான். உன்னைப் போன்ற அழகி தேவலோகத்திலே கூடக் கிடையாது என்று சொன்னான்."

"தேவலோகத்துக்கு அவன் நேரிலே போய்ப் பார்த்திருப்பான் போலிருக்கிறது இன்னும்?"

"நீ நன்றாகப் பாடுவாய் என்று சொன்னான். நீ பாடினால் கடலுங்கூட இரைச்சல் போடுவதை நிறுத்தி விட்டுப் பாட்டைக் கேட்குமாம் அது உண்மைதானா?"

"நீயே அதைத் தெரிந்து கொள் இதோ கடலும் வந்து விட்டது."

இருவரும் கடற்கரை யோரமாக வந்து நின்றார்கள்.

**மூன்றாம் அத்தியாயம்**
**சித்தப் பிரமை**

வானத்தில் விண்மீன்கள் கண்ணைச் சிமிட்டிக் கொண்டிருந்தன. பிறைச் சந்திரன் நீலக் கடலில் மிதக்கும் வெள்ளி ஓடத்தைப் போலப் பவனி வந்து கொண்டிருந்தான்.

காற்றின் வேகம் அதிகமாயிருந்தது. கடல் குமுறியது. வெள்ளலைக் கைகளை நீட்டிக் கரையில் நின்றவர்களைத் தன்பால் இழுக்க முயன்றது.

"ஏன் நிற்கிறாய்? சீக்கிரம் சேற்றைக் கழுவிக் கொள். வீட்டுக்கு உடனே போக வேண்டும். இல்லாவிட்டால் இன்று எனக்குச் சோறு கிடைக்காது.

அண்ணி சோற்றுப் பானையைக் கவிழ்த்து விடுவாள்" என்றாள் பூங்குழலி.

"இங்கே கடலின் ஆழம் அதிகமா?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"உன்னைப்போல் பயங்கொள்ளியை நான் பார்த்ததேயில்லை. இங்கே வெகுதூரத்துக்கு ஆழமே கிடையாது. அரைக் காத தூரம் கடலில் போனாலும் இடுப்பளவு தண்ணீர் தான் இருக்கும். ஆகையினாலே தான் ஒவ்வொரு நாள் இரவும் கலங்கரை விளக்கு எரிய வேண்டியிருக்கிறது"

வந்தியத்தேவன் தயங்கித் தயங்கி தண்ணீரில் இறங்கினான். சேற்றைக் கழுவிக் கைகால்களைச் சுத்தம் செய்து கொண்டு கரை ஏறினான்.

சற்றுத் தூரத்தில் வைத்தியருடைய மகன் குதிரை மேலேறி வருவதைக் கண்டான். வந்தியத்தேவனுடைய குதிரையும் பக்கத்தில் வந்தது.

"ஐயையோ! குதிரை சேற்றில் இறங்கி விடப் போகிறதே" என்றான் வந்தியத்தேவன்.

"இறங்காது மனிதர்களை விடக் குதிரைகளுக்கு விவேகம் அதிகம்" என்றாள் பூங்குழலி.

"ஆனால் ஒரு குதிரையின் பேரில் மனிதன் இருக்கிறானே? அவன் என் குதிரையையும் பிடித்து இழுத்துக் கொண்டு வருகிறானே?"

"அது கொஞ்சம் அபாயந்தான். ஓடிப்போய் எச்சரிக்கை செய்"

"நில்லு! நில்லு!" என்று கூச்சலிட்டுக் கொண்டே வந்தியத்தேவன் ஓடிப் போய்த் தடுத்து நிறுத்தினான்.

பூங்குழலியும் சற்று நேரத்துக்கெல்லாம் அவர்களுடன் வந்து சேர்ந்து கொண்டாள்.

மூவரும் கலங்கரை விளக்கத்தை நோக்கி நடந்தார்கள்.

"நீ குதிரையில் ஏறிக் கொள் எல்லாமே?" என்றாள் பூங்குழலி.

"இல்லை உன்னுடன் நடந்தே வருகிறேன்."

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

(தொடர்ச்சி)

## பத்தாவது பாஸ்



ரகு உண்மையைச் சொல்ல முடியாமல் திண்டாடினான். இன்னும் என்னவெல்லாம் நடக்கப் போகிறதோ என்று பயந்தான்.

அடுத்த நாள் இவன் பயந்தது போலவே இன்னொரு விடயம் நடந்தது. பாண்டித்தேவர் கறவை மாட்டை கன்றுடன் சந்தையில் விற்று விட்டு வந்தார். இவனை காலேஜில் சேர்ப்பதற்கான ஏற்பாடாம்.

பாண்டித்தேவர் வசதியானவர் என்று சொல் முடியாது. இவனை காலேஜில் படிக்க வைக்கக் கூட நிலத்தை விற்றுத்தான் செலவு செய்ய திட்டமிட்டிருந்தார்.

ரகுவின் அம்மா ஒரு பக்கம் தன் மகன் காலேஜில் படிக்கப் போவது பற்றி ஊர்ப் பெண்களிடம் எல்லாம் முறை வைத்துப் பேசினாள்.

இனிமேலும் தான் உண்மையை மூடி மறைப்பது சரியல்ல என்று உணர்ந்து விட்டான் ரகு.

அன்று இரவு தன் அப்பா, அம்மா இருவரையும் அழைத்து இருவரையும் ஒரு சேர நிற்க வைத்தான். இருவரின் கால்களிலும் விழுந்தான் ரகு.

"என்ன என்ன?" என்று பதற்றம் அடைந்தார் பாண்டித்தேவர்.

"நான் உங்களிடம் பொய் சொல்லி விட்டேன். நான் தேர்வில் தவறிய உண்மையை மறைத்து விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்" என்று சொல்லி குலுங்கிக் குலுங்கி அழுதான்.

ரகுவின் அப்பாவும் அம்மாவும் ஒரு கணம் செய்வது அறியாமல் மலைத்து நின்றனர்.

பின்னர் பாண்டித்தேவர் அவனை தூக்கி மார்புடன் தழுவிக் கொண்டார்.

"பாண்டித்தேவர் மகன் காலேஜில் படிக்கிறான் என்று சொல்வதை விட அவன் பொய் சொல்ல மாட்டான் என்று சொல்வதையே நான் பெருமையாகக் கருதுகிறேன்" என்றார் பாண்டித்தேவர்.

"இனி எந்தக் காரணத்தை முன்னிட்டும் பொய் சொல்ல மாட்டேன்" என்று தந்தையின் கையில் அடித்து உறுதி சொன்னான் ரகு.

பாண்டித்தேவருக்குப் பெருமையாக இருந்தது.

அவர் ஆனந்தக் கண்ணீர் வடித்தார்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் உண்மையைக் கண்டுபிடித்து உலகிற்கு வெளிப்படுத்தி விடும்.

~ லத்தீன் பழமொழி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஒரு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினருக்கு நடக்கும் அநியாயத்தைப் பாருங்கள்

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களின் கொழும்பு இல்லத்துக்கு முன்பாக ஒரு குறிப்பிட்ட சிங்களப் பேரினவாதிகள் அடாவடித்தனத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஒரு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினரின் வீட்டுக்கு முன்னால் சிங்கள இனவாதிகள் கூடிநின்று பாராளுமன்ற உறுப்பினருக்கும் அவரது குடும்பத்துக்கும் அச்சுறுத்தல் விடுகின்ற செயலானது இந்த நாட்டில் தமிழ் மக்களின் பாதுகாப்பு எவ்வாறாக உள்ளதென்பதை எடுத்துக் காட்டுகிறது.

ஆம், ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் வாசஸ்தலத்துக்கு முன்பாக, இனவாதத்தை ஏற்படுத்தக்கூடிய தரப்பினர் கூடி நின்று அச்சுறுத்தல் விடுக்கின்றனர் எனும்போது, அவர்களைப் பொலிஸார் கைது செய்து சிறையில் அடைப்பதுடன் பாராளுமன்ற உறுப்பினரின் உயிருக்கு அச்சுறுத்தல் விடுத்தமை மற்றும் இனக் கலவரத்தை ஏற்படுத்துகின்ற நோக்கில் செயற்பட்டமை ஆகிய குற்றச்சாட்டுக்களை முன்வைத்து நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும்.

ஆனால் இதுவரை அவ்வாறான நடவடிக்கைகள் எதுவும் நடைபெறவில்லை எனும்போது, அதற்கான காரணம் என்ன என்ற கேள்வி எழுகிறது.

இங்குதான் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் என்ற காரணத்தால் அவர்கள் சட்டத்தை அமுலாக்காமல் வேடிக்கை பார்க்கிறார்கள்.

அதேநேரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இயலாமையும் பக்கச்சார்பும் வெளிப்பட்டு நிற்கின்றது.

உண்மை. பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் வீட்டுக்கு முன்பாக கூடிநிற்கின்றவர்கள் உடனடியாக அங்கிருந்து கலைந்து செல்ல வேண்டும். அதனைச் செய்யத் தவறும் பட்சத்தில் குறித்த நபர்கள் நாட்டில் மீண்டும் இன வன்மத்தைத் தூண்டி இனக் கலவரத்தை ஏற்படுத்தும் நோக்கோடு செயற்படுகின்றனர் எனக் கருதப்பட்டு, கலவரத்தை அடக்குகின்ற கோதாவில் பொலிஸார் நடவடிக்கை எடுப்பர் என ஜனாதிபதி எச்சரிக்கை விட்டிருக்க வேண்டும்.

ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவ்வாறானதொரு அறிவிப்பை விடப்போவதில்லை என்பதும் தெரிந்த விடயமே.

எது எவ்வாறாயினும் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில, சரத் வீரசேகர போன்றவர்கள் மீண்டுமொரு கறுப்பு ஜூலைக் கலவரத்தை ஏற்படுத்தக் கடும் பிரயத்தனம் செய்கின்றனர்.

தவிர, பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் வாசஸ்தலத்துக்கு முன்பாக, சிங்கள இனவாதிகள் கூடி நின்று அடாவடித்தனம் செய்து அச்சுறுத்தல் விடுவதென்பது தென்பகுதியில் இருக்கக் கூடிய ஒட்டுமொத்தத் தமிழ் மக்களுக்குமான அச்சுறுத்தல்என்பதும் இங்குகவனிக்கப்படவேண்டும்.

இங்குதான் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சி பேதம் மறந்து ஒற்றுமைப்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

ஆம், ஒரு தமிழ்ப்பாராளுமன்றஉறுப்பினரின் வீட்டை சிங்கள இனவாத மிலேச்சர்கள் சூழ்ந்து நின்று அச்சுறுத்தல் விடுகின்றபோது, அது தொடர்பில் உலகநாடுகள் தலையிட்டுக் கதைக்க வேண்டும் என்ற கோரிக்கையை தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வைப்பதுடன் இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன், கனடா உள்ளிட்ட நாடுகளின் தூதுவர்களுக்குத் தகவல் அனுப்ப வேண்டும். அவர்களைச் சந்தித்து மேற்படி கோரிக்கையைத் தெரிவிக்க வேண்டும்.

அப்போதுதான் தமிழ் மக்களுக்கு எதிராகச் சிங்கள பேரினவாதிகள் கட்டவிழ்த்து விடவுள்ள இனக் கலவரத்தைத் தடுக்க முடியும்.

# இனவாத சூறாவளியாலும் சுனாமியாலும் தமிழரை ஒருபோதும் அழிக்க முடியாது

## கனடாவில் மனோ எம்.பி

(ரொரன்டோ)

"இன்வாத சூறாவளி சுழன்றடித்தாலும் சுற்றி சுற்றி அடித்தாலும் சுனாமியாக அடித்தாலும் சரி தமிழர்களை ஒழிக்கவோ அழிக்கவோ முடியாது."

என கனடா - டொரன்டோவில் நடைபெற்ற தமிழர் தெருத் திருவிழாவில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ எம்.பி தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது,

"இலங்கையில் வடக்கு மாகாணத்திலும், கிழக்கு மாகாணத்திலும், மலையகத்திலும், நாடு முழுக்கவும் யுத்தம் இல்லை. ஆனால், இனவாதம் இருக்கின்றது.

இனவாதத்தை அழித்து வீழ்த்தி நியாயமான தீர்வைப் பெறுவோம் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

தமிழக தாயகம், இலங்கை தாயகம் ஆகியவற்றுக்கு வெளியே இங்கே கனடாவில் வாழ்கின்ற தமிழர்கள்தான் அதிக துடிப்புடன் இருக்கின்றீர்கள். இந்நோக்குக்காக நீங்கள் அதிகம் பங்களிக்க வேண்டும்." எனத் தெரிவித்தார். (4-7)

## இரண்டாம் தவணை இன்று ஆரம்பம்

(கொழும்பு)

அரச பாடசாலைகளில் 2ம் தவணை கல்வி நடவடிக்கைகள் இன்று ஆரம்பமாகவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, இரண்டாம் தவணை கல்வி நடவடிக்கைகள் ஒக்டோபர் 27ஆம் திகதி வரை இடம்பெறும் என அமைச்சு தெரிவித்துள்ளது. (4-7)

## நாட்டை விட்டு வெளியேற முயன்ற அறுவர் கைது

(கொழும்பு)

பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் (BIA) கடந்த வாரம் புதிதாக திறக்கப்பட்ட பாதுகாப்பான புலம்பெயர்ந்தோர் ஊக்குவிப்பு பிரிவில் (SMPU) விசிட் விசாவில் நாட்டை விட்டு வெளியேற முயன்ற ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அதன்படி, கைது செய்யப்பட்ட சந்தே நபர்கள் தங்கள் பயணத்தின் உண்மையான நோக்கத்தை அதிகாரிகளுக்கு நிரூபிக்க தவறிய காரணத்தினால் கிழக்கு ஐரோப்பிய நாட்டிற்கான அவர்களது பயணம் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலாபகரமான வேலைகளை வழங்குவதாக வாக்குறுதியளித்த மனித கடத்தல்காரருக்கு 4,00,000 ரூபாய் வீதம் வழங்கி தங்களுடைய வெளிநாட்டு இலக்கை அடைய முனைந்துள்ளனர் என விசாரணைகளின் போது தெரிய வந்ததாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் (SLBFE) பிரதிப் பொது முகாமையாளர் செனரத்யாப்பா தெரிவித்தார்.

மோசமான கண்காணிப்பு அமைப்புகள்மற்றும்தவறான அதிகாரிகளிடையே அதிக அளவிலான ஊழல் காரணமாக மனித கடத்தல்காரர்கள் பண்டார நாயக்கா சர்வதேச விமான நிலையத்தை (BIA) தவறாக பயன்படுத்துவதாகப் பல நாடுகளின் புகார்களைத் தொடர்ந்து இந்த சிறப்புப் பிரிவு அமைக்கப்பட்டது." என தெரிவித்தார். (4-7)

## கஜேந்திரகுமார் வீடு முற்றுகையிட்ட சம்பவம்

### கூட்டமைப்பு எதிர்ப்பு

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் வீட்டுக்கு முன்பாக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தை வன்மையாக கண்டிக்கிறோம். இனவாதத்தை வேண்டுமென்றே தூண்டுகிற முயற்சிகள் முளையிலேயே கிள்ளிஎறியப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதன் உத்தியோகப்பூர்வ டுவிட்டர் பக்கத்தில் இந்த கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கொழும்பு இல்லத்துக்கு பௌத்த தேரர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப் பினர் உதய கம்மன்பில தலைமையிலான குழுவினர் போராட்டத்தில் ஈடுபட் டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## சீனாவின் திட்டத்திற்கெதிராக பொதுமக்கள் போர்க்கொடி

(மொனராகல)

இலங்கையில் காட்டு மரங்களில் இருந்து கரி தயாரிக்கும் சீனாவின் திட்டத்தை எதிர்த்து தனமல்வில கிராம பொது மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

மொனராகல - தனமல்வில, அரம்பேகேம ஆகிய இடங்களில், குறித்த கரி தொழிற்சாலையை திறப்பது சில சுற்றுச்சூழல் பாதுகாப்பு விதிமுறைகளை மீறுவதாக கிராம மக்கள் எதிர்ப்பு காட்டியதை அடுத்து இந்த திட்டம் நிறுத்தப்பட்டுள்ளது.

எனினும் சீனாவின் இந்ததிட்டமானது முழுமையாக அரசால் அங்கீகரிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. மற்றும்20களிமண்உலைகளை கொண்ட முதலீட்டு சபையின் இந்த திட்டம் தனியார் நிறுவனத்திற்கு சொந்தமானது என பல குற்றச்சாட்டுக்கள் பொது மக்களால் முன்வைக்கப்படுகின்றன. (4-7)

## வறட்சியின் கோர தாண்டவத்தால் இலங்கையில் பாலுற்பத்தியும் வீழ்ச்சி

(கொழும்பு)

இலங்கையில்தற்போது நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக வடமேல் மாகாணத்தில் பால் உற்பத்திகடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடுமையான வெப்பம் காரணமாக கால்நடைகளுக்குத் தேவையான மேய்ச்சல்நிலங்கள்வறண்டுள்ளது.

எதிர்வரும் வாரங்களில் வறட்சி மோசமடையும் நிலையில் திரவ பால் உற்பத்தி ஐம்பது வீதம் வரை குறைவடையுமென பால் பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

நாட்டின் சராசரி பால் உற்பத்தி 1,250 மில்லியன் லீற்றரைக் கடந்துள்ள நிலையில், இதில் 18 வீதத்திற்கும் அதிகமான பங்களிப்பை வடமேல் மாகாணம் செய்து வருகிறது.

கடந்த ஜூலை மாதம் வடமேல் மாகாணத்தின் திரவபால் உற்பத்தியானது ஒரு இலட்சத்து ஐம்பத்தாறாயிரம் லீற்றராக பதிவாகியுள்ள போதும், எதிர்வரும் வாரங்களில் வறட்சி நிலை மேலும் மோசமடைந்தால் திரவ பால் உற்பத்தி குறைவடையுமெனபால்பண்ணையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வடமேல் மாகாணத்தில் சுமார் 30 ஆயிரம் கால்நடை பண்ணைகள் காணப்படுகின்றன.

குறித்த பண்ணைகளில் சுமார் 25 ஆயிரம் கால்நடைகள் தற்போது பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேய்ச்சல் நிலங்கள் வறட்சியடைந்துள்ளதால் கால்நடைகளுக்கு போதுமான புல்கிடைக்கவில்லை என கால்நடை உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், வறட்சி காரணமாக நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலுள்ள நீர்நிலைகள், குளங்கள் வற்றியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (4-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **யாழ்.பிரதேசத்தில்**கப்பூது,தில்லையம்பலம்,யாக்காரு நூலகம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பொருளாதார நெருக்கடியும் கடன் மறுசீரமைப்பும் ஒரு தொகுப்பு



17

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

**உள்நாட்டு உற்பத்தி (GDP) எதிர் தேசிய உற்பத்தி (GNP)**

மொத்த தேசிய உற்பத்தி (Gross National Product) மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) இருந்து மாறுபட்டது. GDP ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியின் அளவீடு. இதற்கு புவியியல் எல்லைகள் உண்டு. ஆனால் GNP என்பது உள்நாட்டு உற்பத்தி (GDP) போலவே கணக்கிடப்பட்டாலும் அதற்குப் புவியியல் எல்லைகள் கிடையாது.

உதாரணமாக ஒரு நாட்டின் GDP அந்நாட்டின் எல்லைகளுக்குள் உள்ள மக்கள் மற்றும் அமைப்புகளைக் கொண்டு மட்டுமே கணக்கிடப்படும். ஆனால் GNP கணக்கீட்டில் அந்நாட்டின் குடிமகன்கள் மற்றும் அவர்களது அமைப்புகள் (அவை நாட்டெல்லைக்கு வெளியே அமைந்திருந்தாலும்) அனைத்தும் ஏற்றுக் கொள்ளப்படும். ஒரு நாட்டின் GDP கணக்கீட்டில் பிற நாட்டு குடிமகன்களின் அமைப்புகளும் நாட்டெல்லைக்குள் அமைந்திருந்தால் ஏற்றுக் கொள்ளப்படும். ஆனால் GNP கணக்கீட்டில் அவை ஏற்றுக் கொள்ளப்படா.

அதாவது வருமானத்தின் உள் பாய்ச்சல், வெளிப் பாய்ச்சலிலும் கூடவாயின் GNP>GDP. வருமானத்தின் வெளிப் பாய்ச்சல், உள் பாய்ச்சலிலும் கூடவாயின் GDP> GNP.

மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பது அந்நாட்டின் எல்லைக்குள் உற்பத்தி செய்யப்பட்ட (பொருள்/பணி) மதிப்பாகும். மொத்த தேசிய உற்பத்தி என்பது அந்நாட்டினர் உற்பத்தி செய்யப்பட்ட (பொருள்/பணி) மதிப்பாகும்.

மொத்த உள்நாட்டு உற்பத்தி அந்நாட்டில் வெளிநாட்டினர் செய்த உற்பத்தியை சேர்க்கும். மொத்த தேசிய உற்பத்தி வெளிநாட்டில் அந்நாட்டினர் உழைத்த வருமானத்தை சேர்க்கும்.

| உள்நாட்டு உற்பத்தி (GDP) எதிர் தேசிய உற்பத்தி (GNP) | | |
|---|---|---|
| **வேறுபட்ட வருமானங்கள்** | **GDPயில்** | **GNPயில்** |
| இலங்கையில் இலங்கைப் பிரஜையின் உழைப்பின் வருமானம் | சேர்த்துக் கொள்ளப்படும் | சேர்த்துக் கொள்ளப்படும் |
| இலங்கையில் வெளிநாட்டுப் பிரஜையின் உழைப்பின் வருமானம் | சேர்த்துக் கொள்ளப்படும் | சேர்த்துக் கொள்ளப்படாது |
| வெளிநாட்டில் இலங்கைப் பிரஜையின் உழைப்பின் வருமானம் | சேர்த்துக் கொள்ளப்படாது | சேர்த்துக் கொள்ளப்படும் |

**மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) எவ்வாறு கணக்கிடப்படுகிறது ?**

நான்கு கூறுகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி கணக்கிடப்படும். முதலாவது நுகர்வுச் செலவு. இது சரக்குகள் மற்றும் சேவைகள் ஆகியவற்றை வாங்க தனிநபர்கள் செலவு செய்த மொத்த தொகை ஆகும். இரண்டாவது அரசின் செலவுகள் (உதாரணம் இராணுவச் செலவுகள் போன்றவை) . மூன்றாவது முதலீட்டுச் செலவு. இது ஆலைகள் நிறுவுதல், உட்கட்டமைப்பு மேம்படுத்துதல் ஆகிய வற்றுக்காக செலவிடப்பட்ட தொகை. நான்காவது நிகர ஏற்றுமதி. அதாவது ஒரு நாட்டின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி இடையே உள்ள வேறுபாட்டின் மதிப்பு என்பனவாகும்.


ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி முக மதிப்பு (nominal value) மற்றும் உண்மை மதிப்பு (real value) என்ன இரண்டு வழிகளில் அளவிடப்படும்.

நடப்பு நிதியாண்டில் விலை நிலவரத்தின்படி ஒட்டுமொத்தமாக உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகளின் மதிப்பு GDP யின் முக மதிப்பு எனப்படும்.

ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி ஒரு குறிப்பிட்ட ஆண்டை அடிப்படை ஆண்டாகக் வைத்து கணக்கிடப்படும். தற்போதைய முக மதிப்பு அந்த அடிப்படை ஆண்டில் நிலவிய விலைவாசி நிலவரத்திற்கு ஏற்ப, பணவீக்கத்தின் காரணமாக அதிகமாகவோ, குறைவாகவோ இருக்கலாம்.

இதுவே ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் உண்மை மதிப்பு என்று கூறப்படுகிறது. இந்த உண்மை மதிப்பே ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியை கணக்கிட சரியான முறை என்று கருதப்படுகிறது.

ஒரு நாட்டின் GDP வளர்ச்சி விகிதம் நன்றாக உள்ளது என்றால் அந்த நாட்டின் பொருளாதார நடவடிக்கைகள் சரியாக செயற்படுகின்றன என்றும் அரசின் திட்டங்கள் அடி மட்டம் வரையில் சென்று சரியான திசையில் பயணிக்கின்றன என்றும் பொருள்.




GDP வளர்ச்சியடையாமல் வளர்ச்சி விகிதம் எதிர்மறையாக உள்ளது என்றால் பொருளாதாரத்தை வளர்ச்சியடையச் செய்வதற்கான திட்டங்களில் அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று பொருள். அதுமட்டுமல்லாமல் தொழில்துறையினர், பங்குச் சந்தை முதலீட்டாளர்கள் என பலரும் முடிவெடுப்பதில் GDP தரவுகளை பயன்படுத்துகின்றனர்.

முன்னர் கூறியதுபோல் GDP பொதுவாக ஆண்டு அடிப்படையில் கணக்கிடப்பட்டாலும் சில நேரங்களில் காலாண்டு அடிப்படையிலும் கணக்கிடப்படுகிறது. ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் கணக்கீடு அனைத்து தனியார் மற்றும் பொது நுகர்வு, அரசாங்க செலவினங்கள், முதலீடுகள், தனியார் சரக்குகள், செலுத்தப்பட்ட கட்டுமான செலவுகள் மற்றும் வெளிநாட்டு வர்த்தக சமநிலை ஆகியவற்றை உள்ளடக்கியது.

ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை உருவாக்கும் அனைத்து கூறுகளிலும் வெளிநாட்டு வர்த்தக சமநிலை முக்கியமானது. உள்நாட்டு உற்பத்தியாளர்கள் வெளிநாடுகளுக்கு விற்கும் பொருட்கள் மற்றும் சேவைகளின் மொத்த மதிப்பு, உள்நாட்டு நுகர்வோர் வாங்கும் வெளிநாட்டு பொருட்கள் மற்றும் சேவைகளின் மொத்த மதிப்பை விட அதிகமாக இருக்கும் போது ஒரு நாட்டின் GDP அதிகரிக்கும். இந்த நிலையை வர்த்தக உபரி (trade surplus) என்று அழைக்கிறோம்.

மாறாக உள்நாட்டு நுகர்வோர் வெளிநாட்டுப் பொருட்களுக்குச் செலவிடும் தொகை, உள்நாட்டு உற்பத்தியாளர்கள் வெளிநாட்டு நுகர்வோருக்கு விற்கக்கூடிய மொத்தத் தொகையை விட அதிகமாக இருந்தால் அது வர்த்தகப் பற்றாக் குறை (trade deficit) எனப்படும். இந்த சூழ்நிலையில், ஒரு நாட்டின் GDP குறைகிறது.

**GDP கணக்கிடும் முறை**

GDP = தனியார் நுகர்வு + மொத்த தனியார் முதலீடு + அரசாங்க முதலீடு + அரசாங்க செலவு + (ஏற்றுமதி - இறக்குமதி)

அட்டவணை-அ 1994-2017 வரையான இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (முகமதிப்பு மற்றும் உண்மை மதிப்பு), மொத்த உள்நாட்டு உற்பத்தி மாற்றம் (%), தனிநபர் வருமானம், சனத் தொகை ஆகியவற்றைத் தருகிறது.

2010 அடிப்படை ஆண்டாகும். வரைபு உரு-அ, 1960- 2021 வரையான இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (முகமதிப்பு) யைத் தருகிறது.

(தொடரும்..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதான சந்தேக...

ஆம் திகதி வவுனியா, தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற இரட்டை கொலை சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரதான சந்தேகநபரின் சகோதரர் மீதே நேற்று முன்தினம் இரவு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் வசித்து வரும் தவசிக்குளம் பகுதியில் வைத்து இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இத்தாக்குதல் சம்பவத்தில் பிரதான சந்தேக நபரின் சகோதரரான 37 வயதுடைய நபர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-7,250)

## ரூ.162,000க்கு...

போது மாம்பழம் ஒன்று 162,000 ரூபாய்க்கு ஏலத்திற்கு விற்பனை செய்யப்பட்டது.

உக்குளாங்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் மஹோற்சவ உற்சவத்தின் 06ஆம் நாள் மாம்பழ திருவிழாவான நேற்று முன்தினம் மாலை விநாயகருக்கு படைக்கப்பட்ட மாம்பழம் ஒன்று கோவில் வளர்ச்சி நிதிக்காக ஏலத்தில் விடப்பட்டது.

இதன்போது, பலத்த போட்டிக்கு மத்தியில் 162,000 ரூபாயுக்கு குறித்த மாம்பழம் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டது. (4-7)

## பாடல் போட்டி...

ஒன்று முகநூல் ஒன்றின் ஊடாக பாடல் போட்டி தெரிவை நடாத்தி நேற்று இறுதிப் போட்டி என்று அழைத்து பல லட்சம் ரூபாய் வசூல் செய்து போட்டியாளர்களை ஏமாற்றியுள்ளது

மன்னார் மாவட்டத்தில் இருந்து மாத்திரம் இல்லாமல் இலங்கையின் பல பகுதிகளில் இருந்து குறிப்பாக வவுனியா, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கண்டி, நுவரெலியா, கொழும்பு, மாத்தளை என இலங்கையின் பெரும்பாலான மாவட்டங்களில் இருந்து குறித்த போட்டியில் தமது திறமைகளை வெளிக்காட்டுவதற்கு கலைஞர்கள் வருகை தந்திருந்தனர்.

மூன்று மாதங்களாக குறித்த போட்டியை பதிவு செய்யப்படாத வானொலி ஒன்றின் பெயரின் ஊடாக விளம்பரப்படுத்தி தென் இந்தியாவில் இருந்து பாடகர்கள் நடுவர்களாக கலந்து கொள்வதாக தெரிவித்தும் பல லட்சம் பெறுமதியான பரிசில்கள் இருப்பதாக தெரிவித்தும் கலந்து கொள்பவர்களிடம் 1750 ரூபாய் வீதம் வங்கி கணக்கி வைப்பிலிடுமாறு குறித்த குழுவால் தெரிவிக்கப்பட்டு ஆரம்ப கட்ட பண வசூல் இடம்பெற்றுள்ளது

நேற்று ஞாயிற்றுக்கிழமை இறுதி போட்டியில் கலந்து கொண்டவர்களிடம் 1750 ரூபாயும் மற்றும் பார்வையாளர்களிடம் 400 ரூபாயும் வசூல் செய்து மண்டபத்திற்குள் அனுமதி வழங்கியிருந்தனர்.

சுமார் 1000 மேற்பட்டவர்கள் பணம் செலுத்தி குறித்த நிகழ்ச்சியை பார்வையிடுவதற்காக காத்திருந்தனர்.

8 மணிக்கு ஆரம்பிப்பதாக அறிவித்த போட்டிகள் 11 மணியளவிலே ஆரம்பித்தாகவும் இசைக்குச் சம்பந்தமே இல்லாதவர்கள் நடுவர்களாக கலந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் பல முறை நிகழ்ச்சியின் இடை நடுவே முரண்பாடுகள் ஏற்பட்டு வந்த நிலையில் குண்டர்கள் சிலர் போட்டியாளர்களை மிரட்டி அமர வைத்துள்ளனர்.

இந்த நிலையில் ஏமாற்றப்பட்ட விடயம் அறிந்த போட்டியாளர்கள் மன்னார் பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கிய நிலையில் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்த ஒரு மாணவியை இப் போட்டியில் பாட வைப்பதற்காக ஒரு கிராமமே பேருந்து ஒன்றை வாடகைக்கு அமர்த்தி ஒரு லட்சத்துக்கு மேல் செலவு செய்து இந்த நிகழ்சிக்கு வந்து ஏமாற்றத்துடன் திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7,255)

## கடல் நீரை...

பத்திரங்கள் கோரப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இத்திட்டத்தின் மூலம் 60,000 குடும்பங்களை சேர்ந்த சுமார் 300,000 பேர் பயனடைவார்கள் என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

இத்திட்டத்தின் ஆரம்பகட்ட பணிகள் தொடங்கப்பட்டுள்ளதாகவும், அடுத்த ஆண்டு தொடக்கத்தில் குறித்த பணிகள் நிறைவடையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் யாழ்ப்பாணத்திற்கு குடிநீர் வழங்குவதற்காக, தாழையடி பகுதியில் கடல் நீரை நன்நீராக சுத்திகரிக்கும்பணி முன்னெடுக்கப்பட்டுள்ளமை தொடர்பான புகைப்படங்கள் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## 8 இலட்சம்...

திங்கட்கிழமை விடுவிக்கப்படும். இதற்கமைய 8 இலட்சம் பயனாளர்களுக்கான ஜூலை மாத கொடுப்பனவு செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை பயனாளர்களின் வங்கிக் கணக்குகளுக்கு வைப்பிலிடப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அநுராதபுரம் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

அஸ்வெசும நலன்புரித் திட்டத்தில் காணப்படும் குறைபாடுகளுக்கு தீர்வு காணும் வரை சமுர்த்தி பயனாளர்களுக்கான கொடுப்பனவை தொடர்ந்து வழங்குவதற்கு கொள்கை ரீதியில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தில் இருந்து நிவாரணம் எதிர்பார்த்துள்ள தரப்பினருக்கு நிச்சயம் நிவாரணம் வழங்குவோம்.

அஸ்வெசும நலன்புரித் திட்டம் தொடர்பில் 10 இலட்சத்துக்கு அதிகமாக மேன்முறையீடுகளும், 1 இலட்சத்து 20 ஆயிரத்துக்கு அதிகமான முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன. இவற்றை மீளாய்வு செய்வதற்கு நலன்புரித் திட்ட சபை தற்போது உரிய நடவடிக்கைகளைமுன்னெடுத்துள்ளது எனத் தெரிவித்தார்.(4-7)

## காணா...

எனவும் அறிய முடிகின்றது.

நாளை மறுதினம் 30 ஆம் திகதி புதன் கிழமை "அவர்களை நினைவு கூருவோம், அவர்களை மறக்க மாட்டோம்" என்ற தொனிப்பொருளில் வலிந்து காணாமலாக்கப்படலகளால் பாதிக்கப்பட்டோருக்கான சர்வதேச தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இந்த சர்வதேச தினத்தை முன்னிட்டு நாளை மறுதினம் புதன்கிழமை காலை கொழும்பில் அமைந்துள்ள காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தில் வலிந்து காணாமலாக்கப்படல்களால் பாதிக்கப்பட்டோரை நினைவுகூரும் நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதுடன் இதனையொத்த நிகழ்வுகள் அன்றைய தினம் யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, கிளிநொச்சி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள பிராந்திய அலுவலகங்களிலும் நடைபெறவுள்ளன. (4-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மெகா பவர்
திகதி 27/08/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1567
U 05 08 17 35 74
34146

தன நிதானய
திகதி - 2023.08.27
சீட்டிழுப்பு இலக்கம் - 1249
Z 01 30 41 76 Z
28035

Lucky 7
திகதி 27.08.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0045
L7 இலக்கம் 1 1
வெற்றி இலக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 8 6 1 8 4 4

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3461
சீட்டிழுப்பு திகதி 27.08.2023
R 02 63 67 76
R 15119

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.08.27
சீட்டிழுப்பு இலக்கம் 528
விருச்சிகம் 21 39 45 47 விருச்சிகம்

மஹஜன சம்பத
திகதி 2023/08/27
சீட்டிழுப்பு இலக்கம் 5219
H 8 8 7 3 1 3

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2193 வர்ணம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.08.27 தினம் ஞாயிற்றுக்கிழமை
12 17 31 41 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,400,452.40
79369 610

சனிதா
திகதி 2023.08.27 வெற்றி வாரம் 4354
22 31 56 69 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.55,580,352.00
62427 188

சசிரி
வெற்றி வாரம் 368
சீட்டிழுப்பு திகதி 2023.08.27
கபிலம்
11 15 42
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,828,720/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3905 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.08.27 தினம் ஞாயிற்றுக்கிழமை
06 11 17 23 சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 6,386,524/-
59969 873

திகதி 27.08.2023 வெற்றி வாரம் 1369 வர்ணம் மஞ்சள்
M 07 09 14 44 54
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 433,034,204.20
10651 909
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

ஞாயிற்றுக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,198,816/-
வெற்றி வாரம்: 2019
சீட்டிழுப்பு திகதி: 2023.08.27
ADA KOTIPATHI
01 44 47 59 V
30514 645

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தம் புதிய வெளியீடு தற்போது விற்பனையாகின்றது...!

புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயாராகும் தரம் 04, 05 மாணவர்களுக்கான,




எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

## ஞானவிருட்சம்

ஆரம்பக்கல்வியில் அனுபவம் வாய்ந்த முன்னணி ஆசிரியரின் தொகுப்பில், எதிர்பார்க்கை வினாக்களுடன் கூடிய 24 மாதிரி வினாத்தாள் தொகுப்பு விடைகளுடன்

(ஒவ்வொரு வினாத்தாளும் 16 பக்கங்களை கொண்டது)

**விலை : 950.00**

(C-7145)

வெளியீடு : **Unilanka's Publication & Book Depot**
No. 326, Sea Street, Colombo 11. Tel : 011 4014438
Hotline : 077 7220324 / 077 6258778

## மணமகள் தேவை

யாழ். கத்தோலிக்க (R.C) மதத்தைச் சேர்ந்த தனியார் துறையில் பணி யாற்றும் 1986 ஆம் ஆண்டு பிறந்த மிதுன இராசி, திருவாதிரை நட்சத்திரம், 76 பாவமுடைய, கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு மணமகள் தேவை. (16853)

**077 967 2613**

## மல்லிக் கோப்பி தேவை

சுத்தமாக சுகாதாரமாக சுவையாக மல்லிக் கோப்பி தரக்கூடியவர்கள் எம்மைத் தொடர்பு கொள்ளவும் (16868)

**077 736 0353**

## மணமகன் தேவை

யாழ். கத்தோலிக்க (R.C) மதத்தைச் சேர்ந்த 1989 ஆம் ஆண்டு பிறந்த அரச தொழில் புரியும் மணமகளுக்கு மணமகன் தேவை. யாழில் வசிப்பவர் விரும்பத்தக்கது. கிரகபாவம் 19 3/4, விருச்சிக இராசி, நட்சத்திரம் அனுசம் (16853)

**077 008 3491**

## வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் கருவாட்டுக் கடைக்கு சிங்களத்தில் சரளமாக பேசி வியாபாரம் செய்யக்கூடிய, சகல வேலைகளையும் மேற்கொள்ளக் கூடிய வேலையாட்கள் தேவை (16864)

**077 222 8312**

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

**வங்கியியல் கற்கை நெறிகள்**
**Banking Courses**
**DBF & HDBF (16/09/2023)**
**(IBSL நிறுவனத்தின் மறுசீரமைக்கப்பட்ட பாடவிதானம்)**

**கணக்காளர் கற்கை நெறிகள்**
**Chartered Accounting Courses**
Business Level I,II (16/09/2023)

**தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு**
**aat (Sri Lanka)**
(AA1 - 02.09.2023) G.C.E O/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்
(AA2, AA3 -02/09/2023)

G.C.E A/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்

(C-7164)

**Certificate Course in English**

**Further Details :** Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
021 222 3382/021 222 9149
077 440 5917

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து வயதான பெண் ஒருவரைப் பராமரிப்பதற்கும் சமையல் செய்வதற்கும் 40-55 வயதுக்குட்பட்ட நம்பிக்கைக்குரிய பணிப்பெண் தேவை.
**சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்** (16857)

**077 958 3573**

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (16840)

**076 825 7716** (ஆகாஸ்)

## பணிநிலை வெற்றிடம் விடுதி - உணவகம்

**யாழ்.நகரில் இயங்கும் உயர்தர விடுதி-உணவகத்திற்கு கீழ் காணும் வெற்றிடங்கள் உள்ளன**

- யாழ்.சமையல் நிபுணர்கள்
- லொறி ஓட்டுனர்
- ரூம் போய் (Room Boy)
- உதவியாளர் (Helpers)

**தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்** (16867)

யாழ்.பாடி,51,அம்மன் வீதி,நல்லூர் யாழ்ப்பாணம்

**077 734 0026**

## காணி விற்பனைக்கு

புங்குடுதீவு பிரதான வீதியில் 16+5 பரப்புக் காணி விற்பனைக்கு (16859)

**077 729 5428**

1 ஆம் ஆண்டு

# நினைவு தின அழைப்பு

கடந்த 08.09.2022 வியாழக்கிழமை
அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

## அமரர் கலாராணி கெங்காதரன்



அவர்களின் 1ஆம் ஆண்டு நினைவு தினம் இன்று (28.08.2023) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (16863)

இங்ஙனம்
கெங்காதரன் குடும்பத்தினர்
077 500 1476

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org